வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு
Eelanadu




Email : news@eelanadu.lk | மலர் : 01 | 29.08.2021 சனிக்கிழமை | இதழ் : 267 | பக்கங்கள் : 16

# செப். 6 அதிகாலை வரையில் ஊரடங்கு நீடிக்கப்பட்டது!

**கோவிட் ஒழிப்பு விஷேட கூட்டத்தில் தீர்மானம்**
**தடுப்பூசித் திட்டம் குறித்தும் விரிவாக ஆராய்வு**



கொழும்பு, ஓக. 28
நாட்டில் தற்போது நடைமுறையில் உள்ள தனிமைப்படுத்தல் ஊடரங்கு நிலைமையை, செப்டெம்பர் 06ஆம் திகதி அதிகாலை 4.00 மணி வரை நீடிக்கத் தீர்மானிக்கப்பட்டது. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கோவிட் ஒழிப்பு 15

## 4,561 பேருக்கு நேற்று தொற்று!

கொழும்பு, ஓக. 28
இலங்கையில் கொரோனாத் தொற்றுக்குள்ளான மேலும் 749 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.
சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் இந்த தகவலை வெளியிட்டுள்ளார்.
இதன் அடிப்படையில் இலங்கையில் நேற்று மட்டும் கொரோனா தொற்றுக்கு உள்ளானோர் எண் 15

# 214 பேர் ஒரே நாளில் மரணம்

**நாட்டை உலுக்குகின்றது கொரோனா**

கொழும்பு, ஓகஸ்ட் 28
நாட்டில் நேற்று முன் தினம் வியாழக்கிழமை 214 பேர் கோவிட்-19 நோயினால் உயிரிழந்துள்ளனர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அறிவித்துள்ளார். 15

## யாழ். மாவட்டத்தில் நேற்று 414 பேருக்கு கொரோனா

யாழ்ப்பாணம், ஓக. 28
யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நேற்று முன்னெடுக்கப்பட்ட அன்டிஜன் மற்றும் பி.சி.ஆர். பரிசோதனைகளில் 414 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என மாவட்ட செயலகம் வெளியிட்டுள்ள நாளாந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
குடாநாட்டின் பல பகுதிகளில் நேற்று மேற் 15

## முல்லைத்தீவில் 40 பேருக்கு கொரோனா

முல்லைத்தீவு, ஓக. 28
முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த 40 பேர் நேற்று கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர். 15

**யாழ். போதனா வைத்தியசாலையில்**

## மருத்துவர் உள்ளிட்ட மூவர் நேற்று மரணம்

யாழ்ப்பாணம், ஓக. 28
யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த மருத்துவர் உள்ளிட்ட மேலும் மூவர் கொரோனாத் தொற்றால் நேற்று உயிரிழந்துள்ளனர்.
தேசிய போக்கு 15

## தென்மராட்சியில் உயிரிழந்த பெண்ணுக்கு தொற்று உறுதி!

யாழ்ப்பாணம், ஓக. 28
தென்மராட்சி சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் வசித்துவந்த பெண் ஒருவர் உயிரிழந்த நிலையில் அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. 15

## 1 கிலோ சீனி 300-400 ரூபாவரை உயரும் காலம் நெருங்குகிறது

**எதிர்க்கட்சி சுட்டிக்காட்டு**

கொழும்பு, ஓக. 28
சந்தையில் ஒரு கிலோ சீனி 300 முதல் 400 ரூபாவுக்கு விற்கப்பட்டால் பொதுமக்கள் ஆச்சரியப்பட வேண்டாம் என்று எதிர்க்கட்சி தெரிவித்துள்ளது.
கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது பேசிய ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் துஷார இந்துனில் அமர 15

## ஆப்கானியர்களை கைவிட்டதுபோல் தமிழர்களை கைவிடக்கூடாது

**அமெரிக்கா உணர வேண்டும் என்கிறார் மனோ கணேசன்**



கொழும்பு, ஓக. 28
"அரசாங்க - கூட்டமைப்பு பேச்சுவார்த்தை யோசனையை நாம் வரவேற்கின்றோம். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு தமிழ் மக்கள் வாக்களித்திருந்தாலும், இல்லாவிட்டாலும் கூட அவர்தான் இந்நாட்டு ஜனாதிபதி. ஆகவே இந்த அரசுடன் தான் பேச வேண்டும். ஐநா மனித உரிமை ஆணையக அவை நடக்க உள்ள இந்த வேளையில், இந்த பேச்சு சந்தேகத்தை கிளப்புவது இயல்பானதே. 15




**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது...!

ஓர் ஊருக்கு ஒதுக்குப் புறமாக ஒரு கொடிய விஷமுள்ள பாம்பு வாழ்ந்து வந்தது. ஊர் மக்கள் யாராவது அதன் புற்றின் பக்கம் போனால் சீறி வந்து கொத்தி விடும்.

பாம்புப் புற்று இருந்த பாதை அந்த ஊருக்கும் பக்கத்து சந்தைக்கும் குறுக்கு வழி. பாம்புக்கு பயந்து, ஊர் மக்கள் பல தொலைவு சுற்றி அந்த சந்தைக்குப் போய் வந்து கொண்டிருந்தார்கள்.

ஒருநாள் அந்த ஊருக்கு ஒரு யோகி வந்தார். அவர் மிருகங்களிடம் பேசக் கூடிய வரம் பெற்றவர். ஊர் மக்கள் தங்கள் குறையை அவரிடம் முறையிட்டனர். அவர் பாம்பிடம் பேசி, அதற்கு ஊர் மக்களை கடிக்கக்கூடாது என்று கட்டளை இட்டு விட்டு பக்கத்து ஊருக்குச் சென்று விட்டார். பாம்பும் அவர் கட்டளைக்குக் கட்டுப்பட்டு நடந்தது.

ஆனால், ஊர் மக்கள் சும்மாயில்லை. வழியே போகும் சிறுவனுக்குக்கூட பாம்பிடம் இருந்த பயம் போய் விட்டது. பாம்பைக் கண்டால் அதைக் கல்லால் அடிப்பது, துன்புறுத்துவது, விரட்டியடிப்பது என்று அதன் வாழ்க்கையை நிம்மதியில்லாமல் செய்து கொண்டிருந்தனர். உடம்பில் பல காயங்களுடன் குற்றுயிரும் குறையுயிருமாகி விட்டது பாம்பு.

யோகி ஒருநாள் பாம்புப் புற்று இருந்த வழியாக ஊருக்குள் திரும்ப வரும்போது பாம்பின் பரிதாபமான நிலையைக் கண்டு அதனை விசாரித்தார். பாம்பும் நடந்த கதையையெல்லாம் கூறி அழுதது.

யோகி பாம்பைப் பார்த்து, “அட முட்டாள் பாம்பே! உன்னை மக்களைக் கடிக்கவேண்டாம் என்றுதானே கூறிச் சென்றேன். பக்கத்தில் வருபவனைப் பார்த்து சீறாதே என்று ஒருபோதும் சொல்லவில்லையே” என்றார்.

கொரோனா நெருக்கடி நாட்டைப் புரட்டிப் போட்டிருக்கின்றது என்பது என்னவோ உண்மைதான். ஆனால், அதற்காக எல்லோரும் ஆலோசனை சொல்லத் தொடங்கியிருப்பது ஆச்சரியமானதல்ல.

நாட்டை முடக்கவேண்டும் என்று கோரிக்கை ஒருபுறம், முடக்கினால் நாடு பொருளாதார ரீதியாக முடங்கிவிடும் என்ற அச்சுறுத்தல் மறுபுறமாக எல்லோரும் தத்தமக்கு தெரிந்த ஆலோசனைகளைக் கூறிக்கொண்டிருக்கின்றனர்.

தற்போதுள்ள முடக்கத்தை தொடரவேண்டும் என்று முன்னாள் பிரதமரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்கவும் கோரிக்கை விடுத்திருக்கிறார்.

நாட்டை முடக்கிவைப்பது மாத்திரம் இந்த நெருக்கடிக்கு தீர்வு அல்ல. முடக்கிவைப்பது எவ்வளவு முக்கியமானதோ, அதைவிட முக்கியமானது அனைவரும் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்வது என்பதை யாரும் உரத்துச் சொல்வதாகத் தெரியவில்லை.

தடுப்பூசியை நாடு கொள்வனவு செய்வதில் அக்கறை காட்டவில்லை என்று முன்னர் கூக்குரல் இட்டுக்கொண்டிருந்த எதிர்க்கட்சியினரும், தடுப்பூசியை கொண்டுவர வேண்டும் என்பதற்கு கொடுத்த முக்கியத்துவத்தை தடுப்பூசி போடவேண்டும் என்பதற்குக் கொடுப்பதாகத் தெரியவில்லை.

தடுப்பூசி உலகம் எங்கும் பாவனைக்கு வந்தபோது, செல்வந்த நாடுகள் போட்டி போட்டுக்கொண்டு தடுப்பூசி தயாரிப்பு நிறுவனங்களை நாடி அவற்றை கொள்வனவு செய்ய முண்டியடித்ததால், சிறீலங்காவைப் போன்ற நாடுகளால் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை.

ஆனால், இப்போது நிலைமை அப்படியல்ல. தடுப்பூசி தாராளமாகக் கிடைக்கின்றது. ஆனால், மக்கள்தான் ஆர்வம் காட்டுவதாகத் தெரியவில்லை.

சினோபார்ம் தடுப்பூசி பற்றிய விதண்டாவாத விமர்சனங்கள் வேறு. ஏற்கனவே இந்தப் பத்தியில் அதுகுறித்து பார்த்திருந்தோம்.

தடுப்பூசிகளைப் பொறுத்தவரை ஒவ்வொன்றும் வெவ்வேறு வீத அளவுகளில் செயல்திறன் கொண்டவையாக இருக்கின்றன. ஒன்று 87 வீதம் நோய் எதிர்ப்பு சக்தியை தருகின்றது என்றால் மற்றையது சற்றுக் குறைவாகவோ அல்லது சற்றுக் கூடுதலாகவோ நோய் எதிர்ப்பு சக்தியைத் தரும்.

அதற்காக அதுதான் வேண்டும் என்று நாம் அடம்பிடித்தால், கடைசியில் சித்திரம் வரைய சுவர் இருக்காத நிலைமை ஏற்பட்டுவிடும். முடக்கத்தை கோருகின்ற பிரமுகர்கள், அதற்கும் மோலாக தடுப்பூசியைப் போடுமாறு மக்களையும் கோரவேண்டும்.

அரசாங்கமும் யோகியின் ஆலோசனையைக் கேட்ட பாம்புபோல இல்லாமல், முடிவுகளை எடுக்கவேண்டும்.

**- ஊர்க்குருவி**

# பதுளை பொது மருத்துவமனை நிர்வாகத்தில் மருத்துவர்கள் உட்பட 120 பேருக்கு தொற்று!

பதுளை, ஓக. 28

பதுளை பொது வைத்திய சாலையில் மருத்துவர்கள் உள்ளடங்கலாக நிர்வாகப் பிரிவில் 120 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என வைத்திய சாலையின் கொரோனா சிகிச்சை பிரிவுக்குப் பொறுப்பான மருத்துவர் பாலித ராஜபக்ஷ ஊடகங்களிடம் தெரிவித்தார்.

பதுளை பொது வைத்திய சாலையின் விசேட மருத்துவர்கள் மூவர் உள்ளிட்ட 11 மருத்துவர்கள், தாதியர்கள் 13 பேர், குடும்ப சுகாதார சேவை அதிகாரிகள் 08 பேர், ஏனைய அதிகாரிகள் 11 பேர், சிற்றூழியர்களில் சாரதி, பாதுகாவலர்கள் உள்ளிட்டவர்களுக்கே இவ்வாறு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அனைவரும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

அதேபோன்று வைத்திய சாலையில் ஐந்து கொரோனா சிகிச்சை விடுதிப் பிரிவுகளில் 150 தொற்றாளர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர். தொற்றாளர்களில் 40 இற்கும் மேற்பட்டவர்களுக்கு ஒட்சிசனின் உதவியுடன் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது - என்றும் அவர் மேலும் கூறினார். (ஐ)

## பரமேஸ்வரா கல்லூரி நூற்றாண்டு நாளை!

யாழ்ப்பாணம், ஓக. 28

யாழ்ப்பாணம், திருநெல்வேலி பரமேஸ்வரா கல்லூரியின் நூற்றாண்டை முன்னிட்டு நாளை ஞாயிற்றுக்கிழமை Zoom தொழில்நுட்பத்தில் மெய்நிகர் சந்திப்பு இடம்பெறவுள்ளது.

பரமேஸ்வரா கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கொழும்பு கிளை ஏற்பாடு செய்துள்ள இந்த சந்திப்பு நாளை ஞாயிறு இலங்கை நேரம் நண்பகல் 1:30 மணிக்கு (லண்டன் நேரம் - காலை 9.00, அவுஸ்திரேலியா சிட்னி நேரம் பி.ப. 6.00: அவுஸ்திரேலியா பேர்த் நேரம் பி.ப. 4.00 மணி, கனடா ரொறன்ரோ நேரம் அதிகாலை 4.00) ஆரம்பமாகி இடம்பெறும்.

லண்டனில் வசிக்கும் பழைய மாணவரான வேந்தனார் இளஞ்சேய் ஏற்பாடு செய்துள்ள இந்த நிகழ்வில் கலாநிதி ஆறு. திருமுருகன், யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளை, யாழ். பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் சிறீசற்குணராஜா, முன்னாள் அமைச்சர் டீ. எம். சுவாமிநாதன் உட்பட பலர் உரையாற்றவுள்ளார்கள்.

கூட்டத்துக்கான இணைப்பு:

https://us02web.zoom.us/j/81446439789?pwd=d05lNzQ4R1NFVWhsMFloSDVKZCtHUT09

Meeting ID: 814 4643 9789

Passcode: ekalvi

## பூநகரி கடலில் மிதந்த சடலம்!

கிளிநொச்சி, ஓக. 28

பூநகரி - சங்குப்பிட்டி கடல் பகுதியில் உருக்குலைந்த நிலையில் சடலம் ஒன்று மிதந்த நிலையில் கண்டறியப்பட்டுள்ளது.

கடற்பகுதியில் சடலம் மிதப்பது குறித்து பொலிஸாருக்கு தகவல் அளிக்கப்பட்டமையை தொடர்ந்து, பூநகரி, சாவகச்சேரி பொலிஸார் மற்றும் கடற்படையினர் சம்பவ இடத்திற்கு சென்று பார்வையிட்டனர்.

தொடர்ந்து, மீன்பிடி வலைகள் சுற்றிய நிலையில் காணப்பட்ட சடலத்தை மீட்க நடவடிக்கை எடுத்திருந்தனர். (ஐ)

### கல்வி TV CHANNEL-1

**28.08.2021**
**சனிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | கணிதம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | கணிதம் |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | ஊடகம் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | மனைப்பொருளியல் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | சித்திரம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | கத்தோலிக்கம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast வணிகப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் சிங்களம் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறு ஒளிபரப்பு |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப் பாடங்களும் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | ஊடகம் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | மனைப்பொருளியல் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | சித்திரம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | கத்தோலிக்கம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | தமிழ் |

### கல்வி TV CHANNEL - 2

**28.08.2021**
**சனிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | அழகியல் |
| 08.15 | தரம்-01 | அழகியல் |
| 09.00 | தரம்-02 | கதை |
| 09.45 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 10.30 | தரம்-03 | சைவசமயம் |
| 11.15 | தரம்-04 | Computer |
| 12.30 | தரம்-04 | கிறிஸ்தவம் |
| 01.15 | தரம்-05 | Computer |
| 02.00 | தரம்-05 | கிறிஸ்தவம் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | அழகியல் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | கதை |
| 06.00 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 06.45 | தரம்-03 | சைவசமயம் |
| 07.30 | தரம்-04 | Computer |
| 08.15 | தரம்-04 | கிறிஸ்தவம் |
| 09.00 | தரம்-05 | Computer |
| 09.45 | தரம்-05 | கிறிஸ்தவம் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 12.30 | தரம்-03 | சைவசமயம் |
| 01.15 | தரம்-04 | Computer |
| 02.00 | தரம்-04 | கிறிஸ்தவம் |
| 02.45 | தரம்-05 | Computer |
| 03.30 | தரம்-05 | கிறிஸ்தவம் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

ஈழநாடு
Eelanadu
28.08.2021 சனிக்கிழமை
பிலவ வருடம், ஆவணி 12

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk
**தொலைபேசி : 021 730 1370**

# மீண்டும் ஜிகாதிகளின் ஆட்டம்

ஆப்கானிஸ்தானிலிருந்து அமெரிக்க படைகள் வெளியேறியதை தொடர்ந்து, அங்கு நிலைமைகள் வேகமாக மாறிவருகின்றன. டொனால்ட் ட்ரம்ப் தலைமையிலான அமெரிக்க நிர்வாகம், தலிபான்களுடன் மேற்கொண்ட இரகசிய சந்திப்புக்களை தொடர்ந்தே, படைகளை முழுமையாக விலக்கிக் கொள்ளும் முடிவு எடுக்கப்பட்டது.

முன்னைய ஆட்சியாளரின் வாக்குறுதிகளை நிறைவேற்றும் வகையிலேயே பைடன் தலைமையிலான புதிய அமெரிக்க நிர்வாகம், படைகளை வெளியேற்றும் முடிவை எடுத்திருந்தது. அமெரிக்க எதிர்ப்பு அல்-ஹைடா, ஐ. எஸ். ஐ. எஸ். மற்றும் ஏனைய அமெரிக்க எதிர்ப்பு ஜிகாதிகளுக்கு மீண்டும் ஆப்கானில், அடைக்கலம் வழங்கக்கூடாது என்னும் உறுதி மொழியின் அடிப்படையிலேயே இந்த படை விலகல் இடம்பெற்றதாக முன்னர் கூறப்பட்டது. ஆனால், இஸ்லாமிய அடிப்படைவாத பயங்கரவாத குழுக்களின் வாக்குறுதிகளை ஒரு பொருட்டாக எடுக்கலாமா? அவர்கள் மிகவும் விரைவாகவே தங்களின் நிஜமுகத்தை காண்பித்துவிட்டனர்.

நிலைமைகள் எதிர்பார்த்ததை விடவும் மிகவும் வேகமாக மாறிவிட்டது. அமெரிக்கர்களை கொல்வதற்கு வாய்ப்புக்களை தேடிக் கொண்டிருக்கும் ஜிகாதிகள், சந்தர்ப்பம் கிடைத்தவுடன் தங்களின் வேலையை ஆரம்பித்து விட்டனர். ஆப்கான் தலைநகர் காபூலில் இடம்பெற்ற தற்கொலை குண்டு தாக்குதலில் 13 அமெரிக்க படையினர் உட்பட, நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டனர். “மன்னிக்கமாட்டோம், வேட்டையாவோம்”- என அமெரிக்க அதிபர் பைடன் எச்சரித்திருக்கின்றார்.

ஆப்கானிஸ்தானிலிருந்து அமெரிக்க படைகள் மிகவும் குறுகிய கால அறிவிப்பின் அடிப்படையில் வெளியேறியதை, பல்வேறு அமெரிக்க அரசியல் நிபுணர்களும் விமர்சித்து வருகின்றனர். அமெரிக்காவின் முன்னாள் ( நிக்சன் ஜனாதிபதியாக இருந்த போது ) வெளிவிவகாரச் செயலரும், அமெரிக்காவை பொறுத்தவரையில் தலைமுறைகளை தாண்டி, வெளிவிவகார கொள்கை சார்ந்த விடயங்களில் செல்வாக்குச் செலுத்தும் சிந்தனையாளரருமான ஹென்றி கிசிங்கர்கூட, அமெரிக்காவின் நகர்வுகள் ஆப்கானிஸ்தானில் தோல்வியடைந்து விட்டன எனக் குறிப்பிட்டிருக்கின்றார். அந்தளவிற்கு நிலைமைகள் பாரதூரமாக நோக்கப்படுகின்றன. இவ்வாறானதொரு பின்னணியில்தான், தற்கொலை தாக்குதலில் அமெரிக்க படைகள் கொல்லப்பட்டிருக்கின்றனர். பைடன் நிர்வாகத்தை பொறுத்தவரையில் இது பெரும் சவாலாகும். அல்-ஹைடாவின் வலையமைப்புக்களை முற்றிலுமாக அழித்துவிட்டதாக அமெரிக்க கூறிவரும் நிலையில்தான், இந்த தற்கொலை தாக்குதல் நடந்திருகின்றது.

இந்தத் தாக்குதலுக்கு ஐ.எஸ்-கே (Islamic State Khorasan Province) என்னும் ஜிகாதி அமைப்பு உரிமை கோரியிருக்கின்றது. ஐ. எஸ். ஐ. எஸ். அமைப்பு பலமாக இருந்த காலத்தில், ஆப்கானின்ஸ்தானின் கோரிசான் மாநிலத்தில் உருவாகிய, இந்த அமைப்பானது, ஆப்கான் - பாகிஸ்தான் எல்லைப்பகுதியில் மறைவாக செயல்பட்டுவருகின்றது. ஐ. எஸ். ஐ. எஸ். அமைப்பின் தலைவர் அமெரிக்க தாக்குதலில் கொல்லப்பட்டதை தொடர்ந்து, அந்த அமைப்பு பெருமளவில் செயலிழந்தது. ஆனால், ஐ. எஸ். ஐ. எஸ். அமைப்பு புதிய பெயரில், ஆப்கானிஸ்தானை தளமாகக் கொண்டு மீண்டும் பலமாக உருவெடுக்கப் போகின்றது என்பதையே மேற்படி தாக்குதல் சம்பவம் எதிர்வு கூறுகின்றது.

இந்த நிலையில், உலக அரசியலில் நாடுகடந்த இஸ்லாமிய பங்கரவாதம் மீண்டும் பாரதூரமான விடயமாக உருவெடுக்கப் போகின்றது. இந்த நிலைமைகளை தமிழ்த் தேசிய தரப்பினர் மிகவும் அவதானமாக நோக்க வேண்டும். அமெரிக்காவின் பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தமானது, இறுதியில் விடுதலைப் புலிகள் இயக்கத்தை அரசியல் அரங்கிலிருந்து அகற்றுவதற்கே பயன்பட்டது என்பதையும் இந்த இடத்தில் நினைத்துக்கொள்ள வேண்டும். உலகில் நடைபெறும் இது போன்ற விடயங்கள் எந்த வேளையிலும் நமது அரசியலை பாதிக்கலாம்.

# தாமதம்; ஆனால் காலமறிந்த நடவடிக்கை!

- அலசுவது இராஜதந்திரி -

ஒரு விசேட ஆலோசனை சபை பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளோரின் விடுதலை தொடர்பாக ஆராயும் பொருட்டு நியமிக்கப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கை காலதாமதமானதொன்றான போதிலும் தற்போது காலமறிந்த ஒரு நடவடிக்கையாக இருப்பதையே அறிய முடிகின்றது.

வடக்கு - கிழக்கில் தீவிரவாத நடவடிக்கைகள் ஆரம்பமான காலம் முதல் இன்றுவரை பலர் தமது இளமையை பறிகொடுத்தவர்களாகவும், தமது உறவுகளின் தொடர்புகளை இழந்தவர்களாகவும் சிறைகளில் எவ்வித நீதி விசாரணைகளுமின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். வடக்கு - கிழக்கின் தமிழ் அரசியல் தரப்பினர் தமது தேர்தல் விஞ்ஞாபனங்களிலெல்லாம் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை பற்றி தவறாமல் குறிப்பிடுவதுண்டு. ஆனால், தேர்தல்கள் முடிவடைந்ததும் தமிழ் அரசியல் கைதிகள் பற்றி மட்டுமல்ல. ஏனைய மனிதாபிமான பிரச்னைகள் குறித்தும் வாய்மூடி மௌனிகளாக இருப்பதையே அவதானிக்க முடியும்.

எழுபதுகளிலும், பின்னர் எண்பதுகளின் ஆரம்பத்திலும் மிதவாத தமிழ் அரசியல்வாதிகளின் பொறுப்பற்ற அரசியல் நடவடிக்கைகள் மற்றும் இளைஞர்களை அஹிம்சை வழிப்போராட்டங்களிலிருந்தும் விலகி தீவிரவாத ஆயுதப் போராட்டங்களில் குதிக்குமளவுக்கு உணர்ச்சிகரமான பேச்சுக்களை பேசி தூண்டிவிட்டவர்களும் தமிழ் மிதவாத அரசியல்வாதிகள் என்பது குறிப்பிடத்தக்கது.

**அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா**

இதன்காரணமாக இன்று மீன்பிடித்துறை அமைச்சராக இருக்கின்ற டக்ளஸ் தேவானந்தா உட்பட முன்னாள் வடக்கு - கிழக்கு மாகாண முதலமைச்சர் வரதராஜப்பெருமாள், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிறேமசந்திரன் ஆகியோர் உட்பட ஏராளமான தமிழ் இளைஞர், யுவதிகள் ஆகியோர் எண்பதுகளில் மும்முரமாக இயங்கிய நான்கிற்கும் மேற்பட்ட தமிழ் தீவிரவாத அமைப்புகளில் அங்கம் பெற்றிருந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இதுதவிர ஆயுதப்படையினருடன் 2009ஆம் ஆண்டு வரை நேருக்கு நேர் போரிட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்த ஏராளமான உறுப்பினர்களும் ஆயுதப் படையினரிடம் சரணடைந்த நிலையில் புனர்வாழ்வளிக்கப்பட்டு மீளவும் சமூகத்துடன் ஒன்றிணைக்கப்பட்டுள்ளனர்.

1983ஆம் ஆண்டு ஜூலை இனக்கலவரத்தின்போது வெலிக்கடை சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியல் கைதிகள் பலர் மிக மூர்கத்தனமான முறையில் கொல்லப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. வெலிக்கடை தாக்குதலில் இன்றைய அமைச்சரான டக்ளஸ் தேவானந்தா மயிரிழையில் உயிர் தப்பியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

1983ஆம் ஆண்டு வெலிக்கடை சிறைத்தாக்குதலில் கொலையுண்டவர்களில் தமிழ் தீவிரவாத போராட்டத்தின் ஆரம்ப போராளிகளான குட்டிமணி , தங்கத்துரை ஆகியோர் குறிப்பித்தக்கவர்கள்.



**குட்டிமணி - தங்கத்துரை**


குட்டிமணி மற்றும் தங்கத்துரை ஆகியோர் பற்றி எண்பதுகளின் ஆரம்பத்தில் யாழ்ப்பாண கட்டளைத் தளபதியாக பிரிகேடியர் தரத்தில் இருந்து பின்னாளில் ஜெனரலாக பதவிவகித்த சிறில் ரணதுங்க ஒருதடவை இப்படிக் குறிப்பிட்டிருந்தார், “பலாலி ஓர் சிறிய இராணுவ தளமாக இருந்த காலத்தில் ஓர் இளம் அதிகாரியாக அங்கு பணியாற்றியிருந்தேன். அப்போது ஒரு கள்ளக்கடத்தல் கும்பல் வாகனமொன்றில் செல்வதாக பலாலிக்கு தகவல் கிடைத்தது. உடனடியாக சில சிப்பாய்கள் சகிதம் கடத்தல் கும்பலின் காரை அடையாளம் கண்டு என்னால் துப்பாக்கி பிரயோகம் செய்யக்கூடிய தூரத்தில் அந்தக் காரை நெருங்கினேன். அப்போது நான் வெறுமனே ஆகாயத்தை நோக்கியே சுட்டேன். வேண்டுமானால் மிகத்துல்லியமாக குட்டிமணியை என்னால் சுட்டிருக்க முடியும். ஆனால், ஓர் உயிரைக் கொல்லாது மடக்கிப்பிடிப்பதே எனது நோக்கமாக இருந்தது. ஆனால், எனது சிறிய கருணை குட்டிமணியை வேகமாக தப்பி மறைய வழிவிட்டிருந்துது.“

தங்கதுரை பற்றி குறிப்பிடும் போது ஜெனரல் சிறில் ரணதுங்க கூறியது: “எனது பாதுகாப்பில் தங்கத்துரை இருந்துபோது பல தடவைகள் அவரோடு உரையாடியுள்ளேன். அப்போது அவர் நியாயபூர்வமான விடுதலைப் போராட்டங்கள் பற்றி நல்ல அறிவு படைத்த ஒருவராக இருந்ததை அறிந்து கொண்டேன்”.

ஜெனரல் சிறில் ரணதுங்க பிரிகேடியராக இருந்த காலத்தில் ஒரு மேஜராக இருந்தவரே இன்றைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ. இந்த நிலையில் ஓய்வு பெற்ற பிரதம நீதியரசர் அசோக டீ சில்வா தலைமையில் சிறைகளில் உள்ள தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை மற்றும் அவர்கள் தொடர்பான சட்ட நடவடிக்கைகள் குறித்து ஆராய விசேட குழுவொன்றை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அமைத்திருப்பது வரவேற்புக்குரியதே.

இந்த நடவடிக்கை சட்டபூர்வமாக மட்டுமல்ல. மனிதாபிமானத்தை முன்னிறுத்தி மேற்கொள்ளப்படும் பட்சத்தில் வடக்கு - கிழக்கு மக்களின் நல்லபிமானத்தை ஜனாதிபதியினால் பெற்றுக்கொள்ள முடியுமென்றே கருதலாம்.

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**
பெரிய இலாபம் வராவிட்டாலும் நஷ்டம் ஏதும் இருக்காது. புதிய முதலீட்டைத் தவிர்ப்பது நலம். குதூகலமான நாள். பணியில் எதிர்பார்த்த முன்னேற்றம் இருக்கும். அமைதியான நாள்.

**இடபம்**
பணிச்சுமை இருந்தாலும், அதை உற்சாகமாக செய்து முடிப்பீர்கள். சவால் ஒன்றைத் துணிச்சலுடன் சமாளித்து முன்னேறுவீர்கள். அதிர்ஷ்டம் ஏற்படக் கூடிய அருமையான நாள்.

**மிதுனம்**
புதிய தொழில், வியாபாரத்தில் ஆர்வம் ஏற்படும். நீங்கள் கண்ட கனவுகள் நிறைவேற வாய்ப்புள்ளது. ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். பயம் தீரும்.

**கடகம்**
தடைகளை தகர்த்தெறிய வேண்டிய முயற்சிகளை செய்வீர்கள். புதிய துறையில் விஷயம் ஒன்றைக் கற்று உற்சாகம் அடைவீர்கள். பணிச்சுமை காரணமாகப் பொறுப்பை மற்றவரிடம் விடாதீர்கள்.

**சிம்மம்**
உங்கள் வேலையை விடாமுயற்சியோடு செய்து முடிப்பீர்கள். கல்வியில் மேன்மை அடையக் கூடிய நாள். மகிழ்ச்சி கூடும். பேச்சு, அலைச்சலை தவிர்த்தால் நன்மை உண்டாகும்.

**கன்னி**
எந்த எதிர்மறை சிந்தனையிலும் ஈடுபடாமல் இருப்பது நலம். அனைவரிடமும் சற்றுக் கவனமாக இருக்க வேண்டிய நாள். சுபநிகழ்வு தள்ளிப்போவது பற்றி மனஅழுத்தம் வேண்டாம்.

**துலாம்**
உங்கள் பெருந்தன்மையினால் மதிப்பு, மரியாதை தேடி வரும். புதிய பணி வாய்ப்பு தேடி வரும். முதலீடு இலாபத்தை தரும். சுபநிகழ்ச்சிக்கான ஏற்பாடுகள் கைகூடும். மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**விருட்சிகம்**
சிறிய அளவில் சுபச்செலவு ஒன்று செய்ய வேண்டி வரும். நல்ல காலம் பிறக்க, பொறுமையுடன் சற்றே காத்திருங்கள். வீட்டிலும், வெளியிலும் நிம்மதி கூடும். சுறுசுறுப்பான நாள்.

**தனுசு**
உங்களின் முயற்சியால் எண்ணங்கள் சிறப்பாக நிறைவேறும். மனம் நிம்மதி அடையும். பழைய உறவுகள் புதுப்பிக்கப்படும். மனதை அரித்துக் கொண்டிருந்த கவலைகளில் ஒன்று தீரும்.

**மகரம்**
பதற்றத்தைத் தவிர்த்து நிதானமாக செயல்பட வேண்டும். பங்காளிகளுடன் இருந்து வந்த கருத்து வேறுபாடு நீங்கும்.செலவு வரும் என்பதால் ஆடம்பர செலவைத் தவிர்க்கவும்.

**கும்பம்**
தொலைத்த பொருட்கள் திரும்ப கிடைக்க வாய்ப்புள்ளது. குடும்பத்தில் இருந்த மன சங்கடமான சூழல் மாறும். திருமண வயதில் உள்ளவர்களுக்கு வரன் அமையும்.

**மீனம்**
மகன், மகளுக்குத் திருமணம் நடக்க வாய்ப்புள்ளது. நண்பர் ஒருவர் மூலம் வாழ்வில் முன்னேற்றம் வரும்.குடும்பத்தில் மகிழ்ச்சி கூடுதலாகும். வருமானத்தில் மாறுதல் இல்லை.

# முகாம்களில் உள்ள இலங்கை தமிழருக்கு 3,510 வீடுகள்; கொடுப்பனவு அதிகரிப்பு!!

## அகதிகளுக்கான திட்டங்கள் பலவற்றை அறிவித்தார் ஸ்டாலின்

சென்னை, ஓக. 28,

தமிழகத்தில் உள்ள இலங்கைத் தமிழர்களின் முகாம்களில், மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள 7 ஆயிரத்து 469 வீடுகள், 231 கோடியே 54 இலட்சம் ரூபாய் செலவில் புதிதாகக் கட்டித்தரப்படும். இதில் முதற் கட்டமாக 3 ஆயிரத்து 510 புதிய வீடுகள் கட்டுவதற்கு, நடப்பு நிதி ஆண்டில் 108 கோடியே 81 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.



இவ்வாறு அறிவித்திருக்கின்றார் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின். தமிழக சட்டசபையில் தமிழகத்தில் உள்ள இலங்கைத் தமிழ் அகதிகளின் நலன்கள் குறித்து ஸ்டாலின் பல்வேறு முக்கிய அறிவிப்புகளை நேற்று வெளியிட்டார். அதன் முக்கிய விவரங்கள் வருமாறு:-

“இலங்கை தமிழ் அகதிகளின் குடும்பத்தினருக்கு விலையில்லா எரிவாயு அடுப்பு மற்றும் இணைப்பு வழங்கப்படும். முகாம்களில் வசிக்கும் இலங்கை தமிழர்களுக்கு பணக்கொடை வழங்கப்படுகிறது, இந்த பணக்கொடை உயர்த்தி வழங்கப்படும்.

முகாம்களில் உள்ள மின் வசதி, கழிப்பிட வசதி மற்றும் குடிநீர் வசதி போன்ற இதர அடிப்படை வசதிகளை மேம்படுத்திட 30 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். இதைத் தவிர, ஆண்டு தோறும், இதுபோன்ற வசதிகளை செய்து தர ஏதுவாக, இலங்கைத் தமிழர் வாழ்க்கைத் தர மேம்பாட்டு நிதியாக 5 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். இந்த அடிப்படை வசதிகள் மட்டுமல்லாமல், அவர்களின் பிள்ளைகளின் கல்வி மேம்பட, வாழ்வு சிறக்க பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

முகாம்களில் வசிக்கக்கூடிய இலங்கை அகதிகளுக்கும், வெளிப்பதிவில் உள்ள அகதிகளுக்கும் உரிய உதவிகளை வழங்கிடவும், அடிப்படை வசதிகளை மேம்படுத்திடவும், குடியுரிமை வழங்குதல் மற்றும் அவர்களில் இலங்கை திரும்பும் அகதிகளுக்கு தகுந்த ஏற்பாடுகள் செய்தல் போன்ற நீண்டகாலத் தீர்வினைக் கண்டறிய ஏதுவாகவும், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத் துறை அமைச்சர், பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர், சட்டமன்ற உறுப்பினர் ஒருவர், பொதுத் துறை செயலாளர், மறுவாழ்வுத் துறை இயக்குநர் மற்றும் பிற அரசு உயர் அலுவலர்கள், அரசு சாரா உறுப்பினர்கள், முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுடைய பிரதிநிதி மற்றும் வெளிப்பதிவில் வசிக்கக்கூடிய அகதிகளுக்கான பிரதிநிதி ஆகியோரை உள்ளடக்கிய ஓர் ஆலோசனைக் குழு விரைவில் அமைக்கப்படும்.

இலங்கை தமிழர்கள் உள்ளிட்ட வெளிநாட்டவர்மீது பதிவு செய்துள்ள வழக்குகளை விரைந்து முடிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. வழக்குகள் நிறைவடைந்த பிறகு, இலங்கைக்கு அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். இலங்கை தமிழர்களுக்கு விலையில்லாமல் அரசி வழங்கப்படும்.இலங்கை தமிழர் குழந்தைகள் கல்வி மேம்பட முதல் 50 மாணவருக்கான கல்வி, விடுதி கட்டணத்தை அரசே ஏற்கும். இலங்கை வாழ் தமிழர்களுக்கு மேம்படுத்தப்பட்ட வாழ்க்கையை அமைத்து தருவதை அரசு உறுதி செய்யும்” என கூறினார்.

# பேரறிவாளனுக்கு ஒரு மாதம் பரோல் நீடிப்பு

சென்னை, ஓக. 28,

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் கைதாகி பரோலில் உள்ள பேரறிவாளனுக்கு மேலும் ஒரு மாதம் பரோலை நீடித்து தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளது.

கடந்த 30 ஆண்டுகளாக சிறையில் உள்ள பேரறிவாளன் பல்வேறு இணை நோய்களால் பாதிக்கப்பட்டிருந்த நிலையில் கொரோனா காலம் பாதிப்பை ஏற்படுத்தி விடுமோ என்ற அச்சத்தில் அவரின் தாய் அற்புதம்மாள், நீண்ட நாள் விடுப்பு வழங்க தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் கோரிக்கை



விடுத்தார்.

இதையடுத்து கடந்த மே மாதம் 28ஆம் தேதி பேரறிவாளனுக்கு 30 நாட்கள் பரோல் வழங்கப்பட்டது. இதையடுத்து திருப்பத்தூரில் உள்ள அவரின் வீட்டில் உயர் இரத்த அழுத்தம், சிறுநீரக தொற்று, போன்றவற்றிற்கு சிகிச்சை பெற்று வருகிறார். பேரறிவாளன் தொடர் சிகிச்சையில் இருப்பதால் அவருக்கு இரண்டுமுறை பரோல் நீடித்து வழங்கப்பட் டது.

இரண்டாவது முறையாக நீடிக்கப்பட்ட பரோல் காலம் நேற்றுடன் முடிவடைய உள்ள நிலையில், அவரது உடல்நிலையைக் கருத்தில்கொண்டு பரோல் காலத்தை மேலும் நீடிக்க வேண்டும் என அவரது தாயார் அற்புதம்மாள் தமிழ்நாடு அரசுக்கு கோரிக்கை விடுத்தார். அதை ஏற்ற தமிழ்நாடு அரசு, மூன்றாவது முறையாக பேரறிவாளனுக்கு மேலும் ஒரு மாதம் பரோலை நீடித்து உத்தரவிட்டுள்ளது.

# உள்ளாட்சி தேர்தலுக்கு தயாராகும் ம.நீ.ம. நிர்வாகிகளுடன் கமலஹாசன் ஆலோசனை

சென்னை, ஓக. 28,

“உள்ளாட்சி தேர்தலில் மக்கள் நீதி மய்யம் போட்டியிடுவது உறுதி. மக்களின் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப தேர்தல் அறிக்கை தயார் செய்ய வேண்டும். தேர்தல் கூட்டணி என்பது அந்த நிமிடம் அமையும் கூட்டணியாக இருக்கும்” என கட்சி நிர்வாகிகள் ஆலோசனை கூட்டத்தில் கட்சித் தலைவர் கமல்ஹாசன் தெரிவித்தார்.

மக்கள் நீதி மய்யம் கட்சி சார்பில் உள்ளாட்சி தேர்தல் குறித்த மாநில - மண்டல நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம், சென்னை ஆழ்வார்பேட்டையில் அக்கட்சி தலைமை அலுவலகத்தில் நேற்று நடந்தது.



கட்சி தலைவர் கமல்ஹாசன் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் துணைத்தலைவர் ஏ.ஜி. மவுரியா, அரசியல் ஆலோசகர் பொன்ராஜ், நிர்வாகக்குழு உறுப்பினர் ஸ்ரீபிரியா மற்றும் மாநில செயலாளர்கள் உள்பட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

இந்த கூட்டத்தில், உரையாற்றிய கமல்ஹாசன், “உள்ளாட்சி தேர்தலில் மக்கள் நீதி மய்யம் போட்டியிடுவது உறுதி.

மக்களின் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப தேர்தல் அறிக்கை தயார் செய்ய வேண்டும். தேர்தல் கூட்டணி என்பது அந்த நிமிடம் அமையும் கூட்டணியாக இருக்கும். கூட்டணிக்காக வருபவர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும்.

தேர்தல் நடைபெற உள்ள 9 மாவட்டங்களில் கட்சி நிர்வாகிகள் கவனம் செலுத்தி தேர்தல் பணிகளில் ஈடுபட வேண்டும். கட்சியின் கட்டமைப்புகளை வலுப்படுத்துவதில் அதிக கவனம் செலுத்திட வேண்டும்” என்று தெரிவித்தார்.



## வீடு திரும்பினார் அஜித் ரோஹண!

கொழும்பு, ஒக. 28

சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரும் முன்னாள் பொலிஸ் ஊடகப் பேச்சாளருமான அஜித் ரோஹண கொரோனா தொற்றிலிருந்து குணமாகி வைத்திய சாலையில் இருந்து நேற்று வீடு திரும்பியுள்ளார்.

அவர் வைத்தியசாலையில் இருந்து வெளியேறுவதற்கு முன்னதாக வைத்தியசாலை பணிக்குழாமினருக்கு நன்றி தெரிவித்து, புகைப்படம் ஒன்றையும் எடுத்துக்கொண்டார்.

# அரச ஊழியர்களின் சம்பளம் ஒருபோதும் குறைக்கப்படாது

## அமைச்சர் மஹிந்த அமரவீர திட்டவட்டம்



**கொழும்பு, ஒக.28**

**அரசு எதிர்கொள்ளும் பொருளாதார சிரமங்கள் இருந்தபோதிலும், கோவிட்-19 நிதிக்காக அரச ஊழியர்களின் சம்பளம் குறைக்கப்படாது என சுற்றுச்சூழல் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.**

கோவிட்-19 தொற்று நோயால் ஏற்றுமதி வருவாய் ஓரளவுக்கு குறைந்துவிட்டாலும், அந்த சுமையை பொது மக்களுக்கு வழங்கத் தயாராக இல்லை என்று அவர் குறிப்பிட்டார்.

சுற்றுச்சூழல் அமைச்சில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

தற்போதைய நிலைமையில் பொது ஊழியர்களின் கொடுப்பனவுகளான மேலதிக நேரக் கொடுப்பனவுகள் மற்றும் கூட்டுக் கொடுப்பனவுகள் கோவிட்-19 சூழ்நிலையின் காரணமாக அரசு அலுவலகங்களை மூடுவது போன்றவற்றை பாதிக்கும் என்று அமைச்சர் மஹிந்த அமரவீர சுட்டிக்காட்டினார்.

அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனுபவிக்கும் சலுகைகளை தியாகம் செய்வதன் மூலம் அரச செலவீனங்களைக் குறைத்து அரசியல்வாதிகள் இந்த தருணத்தில் ஒரு முன்மாதிரியாக நடக்கவேண்டும் என அவர் மேலும் குறிப்பிட்டார்.

## வவுனியா புதிய அரச அதிபராக சரத்சந்திர நேற்று பதவியேற்பு

வவுனியா, ஒக. 28

வவுனியா மாவட்ட புதிய அரசாங்க அதிபராக பீ.ஏ.சரத்சந்திர நேற்று மதியம் பதவியேற்றுக் கொண்டார்.

வவுனியா அரச அதிபராக கடமையாற்றிய சமன் பந்துலசேன வடமாகாண பிரதம செயலாளராக பதவி உயர்வு பெற்று சென்றிருந்தார். இதனையடுத்து கடந்த ஒரு மாத காலமாக மேலதிக அரசாங்க அதிபராக கடமையாற்றிய தி.திரேஸ்குமார் பதில் அரச அதிபராக கடமையாற்றினார்.

இந்நிலையில், பௌத்த சாசன அமைச்சில் உதவி ஆணையாளராக பதவி வகித்த பீ.ஏ.சரத்சந்திர வவுனியா மாவட்டத்தின் புதிய அரசாங்க அதிபராக அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட நிலையில், தனது மனைவி, பிள்ளைகளுடன் வவுனியாவுக்கு வருகை தந்த அவர் பௌத்த பிக்குகள், இந்து, இஸ்லாமிய, கிறிஸ்தவ மதத் தலைவர்களின் ஆசியுடன், மேலதிக அரசாங்க அதிபர் தி. திரேஸ்குமார் மற்றும் மாவட்ட செயலக அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள் முன்னிலையில் தனது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார்.

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி எளிமையான முறையில் இந்த பதவியேற்பு நிகழ்வு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## மேலும் 2,122 பேர் குணமடைவு

கொழும்பு, ஒக.28

கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியிருந்த மேலும் 2 ஆயிரத்து 122 பேர் பூரண குணமடைந்து நேற்று வெள்ளிக்கிழமை வீடுகளுக்கு திரும்பியுள்ளனர்.

இதனையடுத்து, இலங்கையில் இதுவரை கொரோனா தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 3 இலட்சத்து 53 ஆயிரத்து 191 ஆக அதிகரித்துள்ளது.

இலங்கையில் இதுவரை 4 இலட்சத்து 12 ஆயிரத்து 370 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதேநேரம், கொரோனா தொற்றினால் இதுவரை, 8 ஆயிரத்து 157 பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

## நாட்டை முடக்குவதால் மாத்திரம் கொரோனாவை கட்டுப்படுத்த முடியாது

### இராஜாங்க அமைச்சர் சுதர்சினி கூறுகிறார்



கொழும்பு, ஒக. 28

மக்கள் சுகாதார நடைமுறைகளை பின்பற்றாமல் இலங்கையை முடக்குவதால் மாத்திரம் கோவிட் வைரஸ் பரவலை கட்டுப்படுத்த முடியாது என இராஜாங்க அமைச்சர் சுதர்ஷனி பெர்ணர்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

டெல்டா வைரஸ் மிக வேகமாக பரவுவதால் அனைவரும் தடுப்பூசி செலுத்திக் கொள்ளுமாறு அவர் கோரிக்கை விடுத்தார்.

இலங்கையில் உள்ள அனைத்து தடுப்பூசிகளும் டெல்டாவுக்கு எதிராக போராடுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

அதனால் அனைவரும் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும் எனவும் அவர் கூறினார்.

## பொது முடக்க காலத்தில் நாட்டில் அத்தியாவசிய சேவைக்கு அனுமதி

கொழும்பு, ஒக. 28

தனிமைப்படுத்தப்பட்ட ஊரடங்கு உத்தரவு செப்ரெம்பர் 6ஆம் திகதி அதிகாலை 4 மணிவரை நீடிக்கப்பட்டுள்ள நிலையில், அந்தக் காலத்தில் அனைத்து ஏற்றுமதித்துறை மற்றும் ஆடை தொழிற்சாலைகள் வழக்கம் போல் செயல்பட அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இந்த காலப் பகுதியில் அனைத்துவிதமான அத்தியாவசிய சேவைகள், மருந்து தயாரிப்பு மற்றும் விநியோகம், விவசாயம், ஆடைக் கைத்தொழில் ஆகியவற்றை எவ்வித இடையூறுமின்றி முன்னெடுக்க முடியும் என அவர் மேலும் குறிப்பிட்டார்.

இதனைத்தவிர, 60 வயதுக்கு மேற்பட்ட அனைத்து பிரஜைகளுக்கும் தடுப்பூசி ஏற்றுவதற்கான வேலைத்திட்டம் சுகாதாரத் துறையினரால் தொடர்ந்து முன்னெடுக்கப்படும் எனவும் இராணுவத் தளபதி தெரிவித்தார்.

## அரசின் பைத்தியக்கார செயலுக்கு நாம் உடந்தையாக இருக்கமுடியாது

### பிரபல பாடகர் இராஜ் பரபரப்பு கருத்து



கொழும்பு, ஒக. 28

தன்னை யாரும் கன்னத்தில் அறையவில்லை என்று பிரபல பாடகர் இராஜ் வீரரத்ன தெரிவித்துள்ளார்.

அவர் சமூக வலைத்தளமொன்றில் நடந்த நேர்காணலின்போது இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

தனது இசைப்பயணத்தை வலுப்படுத்தவே பதவிகளிலிருந்து விலகி ஓய்வுபெற்றிருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

அரசாங்கத்தின் பைத்தியக்காரத்தனமான செயல்பாடுகளுக்கு தன்னால் பொறுப்புக் கூற முடியாது எனவும் அவர் குறிப்பிட்டார்.

நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் ஆட்சி மாற்றம் தேவை என்ற சமூக அக்கறையுடன் செயல்பட்டதாகவும், ஆனால், தற்போதைய அரசாங்கம் கண்மூடித்தனமாக செயல்படுவதாகவும் இராஜ் குற்றம் சுமத்தியுள்ளார்.

இதேவேளை, ஜனாதிபதி மேலும் கடுமையான தீர்மானங்களை மேற்கொள்ளவேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

‘காரணம், இன்று பயணக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ள போதிலும், மக்கள் அதனை சரிவர பின்பற்றவில்லை. இதனால் கடுமையான தீர்மானங்களை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும். அரசாங்கம் எடுக்கின்ற சில தீர்மானங்கள் குறித்து நான் அதிருப்தி அடைந்துள்ளேன்’ எனவும் அவர் தெரிவித்தார்.

கடந்த 25ஆம் திகதி இராஜ் வீரரத்ன தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் பணிப்பாளர் சபைக்கான உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்திருந்தார்.

இது தொடர்பில் இராஜ் வீரரத்ன, இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷவுக்கு கடிதமொன்றை அனுப்பியிருந்தார்.

அந்த கடிதத்தில், தனிப்பட்ட காரணங்களின் அடிப்படையில் தான் இந்த முடிவை எடுத்தாரென அவர் சுட்டிக் காட்டி இருந்தார்.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் பணிப்பாளர் சபைக்கு புதிய உறுப்பினர்களாக இராஜ் வீரரத்னவும், தெஹானி இமாராவும் கடந்த வருடம் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ வினால் நியமிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## நீல மாணிக்கக்கல் சுவிஸ் சென்றது

கொழும்பு, ஒக. 28

இரத்தினபுரி, பெல்மடுல்ல பகுதியில் உள்ள தனியார் சுரங்கத்தில் கண்டெடுக்கப்பட்ட உலகின் மிகப் பெரிய நீல இரத்தினக்கல் பாதுகாப்பாக சுவிற்சர்லாந்துக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

நீல மாணிக்கம் ஒரு சான்றிதழைப் பெறுவதற்காக சுவிற்சர்லாந்துக்கு எடுத்துச் செல்லப்பட்டதாக இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தை கூறினார்.

சுவிற்சர்லாந்தில் உள்ள இரத்தினக்கல் ஆய்வகத்தில் முழுமையாக பரிசோதித்த பிறகு தரச் சான்றிதழ் வழங்கப்படும்.

பின்னர் வெளிநாட்டு இரத்தினக்கல் ஏலத்தில் அதனை விற்க ஏற்பாடு செய்யப்படுகிறது.

அந்த இரத்தினக்கல் தொடர்பாக உலகின் பல நாடுகளில் இருந்து தொடர்பு கொண்டதாகவும், சீனாவில் நடக்கும் கண்காட்சியில் அதை விற்க முடியுமென எதிர்பார்ப்பதாகவும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

# தலைமை பதவியில் ரணில் தொடர்வார்?

## 6 ஆம் திகதி முடிவு

கொழும்பு, ஓக. 28

ஐக்கிய தேசியக்கட்சியின் 75 ஆவது ஆண்டு விழாவை எதிர்வரும் செப்ரெம்பர் 06 ஆம் திகதி நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் பரவவால் கட்சித் தலைமையகத்துக்குள் மட்டுப்படுத்தப்பட்ட உறுப்பினர்களின் பங்குபற்றலுடன் நிகழ்வு நடத்தப்படவுள்ளது.

கட்சி மறுசீரமைப்பு தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் முன்மொழிவுகள் மாநாட்டில் முன்வைக்கப்படவுள்ளதுடன், கீழ்மட்ட அரசியல் இயந்திரத்தை வலுப்படுத்துவதற்கான யோசனைகளும் இடம்பெறவுள்ளன.

ஐ.தே.க. தலைமைப் பதவியில் மாற்றம் வருமென அறிவிக்கப்பட்டாலும் பதவியை கைவிடுவதற்கு ரணில் விக்கிரமசிங்க தயார் நிலையில் இல்லை. எனினும், எப்போது புதியவரிடம் பொறுப்பு கையளிக்கப்படும் என்ற அறிவிப்பை அவர் மாநாட்டில் வெளியிடக்கூடும் எனவும், 2022 செப்ரெம்பர் வரை ரணிலே அப்பதவியில் நீடிப்பார் எனவும் கட்சி உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# ஈஸ்டர் தாக்குதல் விசாரணைகளை தடுத்தவர்களை வெளிப்படுத்துங்கள்

## ஹர்ஷன ராஜகருணா அரசுக்கு சவால்



**கொழும்பு, ஓக.28**

**ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணைகளை நடத்துவதற்கு தடையாக இருந்தவர்களின் விவரங்களை வெளிப்படுத்துமாறு ஐக்கிய மக்கள் சக்தி பொலிஸ்மா அதிபரிடம் கேட்டுள்ளது.**

தாக்குதல் தொடர்பான விசாரணைகள் தொடர்பாக அண்மையில் பொலிஸ்மா அதிபர் தெரிவித்த கருத்து குறித்து நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா இவ்வாறு கூறினார். ஆகவே ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணைகளுக்கு இடையூறு விளைவித்தவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அவர் கட்டுக்கொண்டார்.

# வவுனியாவில் விற்றமின் சி,டி மருந்துகளுக்கு தட்டுப்பாடு

வவுனியா, ஓக. 28

கொரோனா வைரஸ் தொற்று காரணமாக வவுனியா மாவட்டத்தில் விற்றமின் சி மற்றும் விற்றமின் டி ஆகிய மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுகின்றது. நாட்டில் கொரோனா தொற்று வேகமாக அதிகரித்து வரும் நிலையில் கொரோனா நோயாளர்களை வீடுகளில் வைத்து சிகிச்சையளிக்கும் முறையும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

அத்துடன் கொரோனா தொற்றில் இருந்து பாதுகாக்க நோய் எதிர்ப்பு சக்தியை வழங்க கூடிய விற்றமின் சி மற்றும் விற்றமின் டி ஆகிய மாத்திரைகளை பயன்படுத்துமாறு சில மருத்துவர்கள் அறிவுரை கூறியுள்ளனர்.

இதற்கமைவாக வவுனியா மாவட்டத்தில் பலரும் விற்றமின் சி மற்றும் விற்றமின் டி ஆகிய மருந்துகளை அதிகளவில் கொள்வனவு செய்து வீடுகளுக்கு கொண்டு செல்வதனால் பல தனியார் மருந்தங்களில் இந்த மருந்துகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதனால் தனியார் மருந்தகங்களுக்கு செல்லும் பலரும் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்வதையும் அவதானிக்க முடிகிறது. அத்துடன், பரசிற்றமோல் மருந்துக்கான கேள்வியும் அதிகரித்துள்ளமையால் சில மருந்தகங்களில் அதன் இருப்பு முடிவடைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# டெல்டாவால் பாதிக்கப்பட்டவர்களுக்கு திடீரென மாரடைப்பு ஏற்படும் அபாயம்!

## விசேட மருத்துவ நிபுணர் கோட்டாபய ரணசிங்க தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 28

டெல்டா வைரஸ் திரிபால் பாதிக்கப்பட்ட ஒருவருக்கு எவ்வித அறிகுறிகளும் வெளிக்காட்டாமல் திடீரென மாரடைப்பு ஏற்படக்கூடிய அபாயம் காணப்படுகின்றது எனக் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் மார்பு சிகிச்சைப் பிரிவின் விசேட மருத்துவ நிபுணர் கோட்டாபய ரணசிங்க தெரிவித்தார்.

இது மிகவும் ஆபத்தான நிலைமையாகும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

கடந்த ஒரு வாரத்தினுள் இவ்வாறு அடையாளம் காணப்பட்ட 20 இற்கும் அதிகமானோருக்கு அவசர சத்திர சிகிச்சைகளை மேற்கொள்ள வேண்டியிருந்தது எனவும் அவர் குறிப்பிட்டார்.



எனவே, இந்த அபாயநிலை காரணமாக, எவருக்கேனும் மாரடைப்பு ஏற்படுவதற்கான அடிப்படை அறிகுறிகள் வெளிக்காட்டும் பட்சத்தில், அவரை உடனடியாக மருத்துவ சிகிச்சைகளுக்காக வைத்திய ச ாலையில் அனுமதிப்பது சாலச்சிறந்தது எனவும் அவர் கூறினார்.

இது தொடர்பில் விசேட வைத்திய நிபுணர் கோட்டாபய ரணசிங்க மேலும் தெரிவித்ததாவது:-

"நாட்டில் கொரோனாவின் முதலாம் மற்றும் இரண்டாம் அலைகளின்போது, இவ்வாறான நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டிருக்கவில்லை. மூன்றாவது அலையின்போது தோற்றம் பெற்ற டெல்டா திரிபின் காரணமாக இந்த நிலைமை உருவாகியுள்ளது.

இவ்வாறு மாரடைப்புக்குள்ளாகி வைத்தியசாலையில் அனுமதியாகும் பெரும்பாலானோர் இளம் வயதினராவர். இவர்கள் மாரடைப்புக்குக் காரணமாகும் உயர் இரத்த அழுத்தம், கொலஸ்ட்ரோல், நீரிழிவு போன்ற எந்தவொரு நோய்களையும் கொண்டிராதவர்கள்" - என்றார். (இ)

# பொதுபோக்குவரத்து நிறுத்தப்பட்டமையால் ரயில் திணைக்களத்துக்கு ரூ.100 கோடி நட்டம்

கொழும்பு, ஓக. 28

சுகாதார வழிகாட்டல்களுக்கமைய, பொதுபோக்குவரத்து சேவைகள் இடைநிறுத்தப்பட்டதால் ரயில் திணைக்களத்துக்கு சுமார் 100 கோடி ரூபாய் நட்டமும், இலங்கை போக்குவரத்து சபைக்கு 80 கோடி ரூபாய் நட்டமும் ஏற்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

நாடு முழுவதும் தனிமைப் படுத்தல் ஊரடங்கு அமுல்படுத் தப்பட்டுள்ளதன் காரணமாக, மதுவரித் திணைக்களத்துக்கு 600 கோடி ரூபாய் வருமான இழப்பு ஏற்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

வேலை நாளொன்றில் மதுவரித் திணைக்களத்தின் மூலம் திறைசேரிக்கு குறைந்தது 60 கோடி ரூபாய் வருமானம் கிடைத்துவந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ஊரடங்கு கட்டுப்பாடுகளைமீறி மட்டக்களப்பில் மக்கள் நடமாட்டம்

மட்டக்களப்பு, ஓக. 28

கொரோனா தொற்று அதிகரித்துள்ள நிலையில் அரசாங்கத்தினால் தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்படும் நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் அதனை மீறும் வகையில் சில பகுதிகளில் மக்கள் செயல்படுகின்றனர் என தெரிவிக்கப்படுகின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கொரோனா தொற்றாளர்களின் அதிகரிப்பும் அதனால் ஏற்படும் இறப்பு வீதம் அதிகரித்துவரும் நிலையில் தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டத்தை மக்கள் இறுக்கமாக பின்பற்றுமாக சுகாதாரப் பிரிவினரால் தொடர்ச்சியாக கோரிக்கைகள் விடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் மட்டக்களப்பு நகர் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் மக்கள் அதிகளவில் நடமாடி திரிவதை காணமுடிகின்றது. சிலர் முக்கவசம் இன்றியும் நடமாடித்திரிவதை காணமுடிகின்றது.

பொலிஸாரும் இராணுவத்தினரும் தொடர்ச்சியாக சோதனை நடவடிக்கைகளை முன்னெடுக்கின்ற போதிலும் அதனை மீறிய வகையில் மக்கள் செயற்படுகின்றனர்.

இதேவேளை, மட்டக்களப்பு மாவட்டத்தில் மக்களின் நடமாட்டம் அதிகளவில் காணப்படுவதன் காரணமாக இந்த செயல்பாடு அவர்களின் குடும்பத்தினதும் உறவினர்களினதும் குடும்பத்தினரது உயிரிழப்புக்கும் தொற்றுக்கும் காரணமாக அமையும் நிலையேற்படும் என மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் நாகலிங்கம் மயூரன் தெரிவித்தார்.

மக்கள் வீட்டில் இருப்பதன் மூலமே இந்த கொரோனா தொற்றினைக்கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர முடியும் எனவும் அவர் கூறினார்.

# மன்னாரில் கொரோனாவால் மேலும் இருவர் உயிரிழப்பு!

மன்னார், ஓக. 28

மன்னாரில் மேலும் இரண்டு கொரோனா மரணங்கள் நேற்று வியாழக்கிழமை நிகழ்ந்த நிலையில் மாவட்டத்தில் கொரோனா தொற்றுடன் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 15 ஆக அதிகரித்துள்ளதாக மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ரி.வினோதன் தெரிவித்தார்.அவர் மேலும் தெரிவிக்கை யில்-

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் உயிரிழந்த இருவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

மன்னார் சாந்திபுரம் பகுதியைச் சேர்ந்த 68 வயதுடைய பெண் ஒருவர் வைத்தியசாலையில் உயிரிழந்தார்.

அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர்.பரிசோதனையின்போது குறித்த பெண்ணுக்கு கொரோனா தொற்று உள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

மேலும் குருநாகல் பகுதியை சேர்ந்த 82 வயதுடைய வயோதிபர் ஒருவர் கொரோனா தொற்று காரணமாக கடந்த மூன்று வாரங்களாக மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்துள்ளார்.

இவருக்கு ஏற்பட்ட நிமோனியா காய்ச்சல் காரணமாக நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இரவு உயிரிழந்தார்.

மாவட்டத்தில் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 15 ஆக அதிகரித்துள்ளது.

மேலும், மாவட்டத்தில் கடந்த முதலாம் திகதி முதல் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை வரை 515 கொரோனா தொற்றாளர்களும் மாவட்டத்தில் தற்போது வரை 1556 கொரோனா தொற்றாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்-என்றார்.

# 16,000 கைதிகளுக்கு கொரோனா தடுப்பூசி

கொழும்பு, ஓக. 28

சிறைச்சாலைகளில் உள்ள 16,000 கைதிகளுக்கு கொரோனா தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் சிறைக் கைதிகள் புனர்வாழ்வளிப்பு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தை தெரிவித்துள்ளார். அத்தோடு, சுமார் 5,000 கைதி களுக்கு தடுப்பூசி செலுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வும் அவர் மேலும் கூறினார்.

# சகல பிரஜைகளுக்கும் நவம்பருக்குள் தடுப்பூசி

## சுகாதார அமைச்சர் தெரிவிப்பு



கொழும்பு, ஓக. 28

**எதிர்வரும் நவம்பர் மாதத்துக்குள் 18 வயதுக்கு மேற்பட்ட சகல பிரஜைகளுக்கும் முழுமையாக தடுப்பூசி செலுத்தும் பணிகள் நிறைவுசெய்யப்படும் என சுகாதார அமைச்சர் தெரிவித்துள்ளார்.**

கியூப தூதுவரை நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை சந்தித்து கலந்துரையாடியபோது, சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல இதனைக் குறிப்பிட்டார்.

இதேவேளை, செப்ரெம்பர் மாத நடுப்பகுதியில் 30 வயதுக்கு மேற்பட்ட சகலருக்கும் தடுப்பூசி வழங்கும் பணிகள் நிறைவு செய்யப்படும் என்றும் அவர் கூறினார்.

நாட்டின் சகல பிரஜைகளுக்கும் முழுமையான தடுப்பூசிகள் செலுத்தப்பட்டதை அடுத்து 3ஆம் தடுப்பூசி வழங்குவது குறித்து அவதானம் செலுத்தப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, எதிர்காலத்தில் வீடுகளுக்கு சென்று அன்ரிஜென் பரிசோதனை செய்வதற்கான நடவடிக்கைகள் அறிமுகப்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

# மஹிந்த குறித்து பரவிய வதந்தி

கொழும்பு, ஓக. 28

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு கோவிட் -19 வைரஸ் தொற்று இல்லை. அவர் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்படவில்லை. அவரது உடல் நலம் குறித்த வதந்திகள் பொய்யானவை என்று பிரதமர் பணியாளர்கள் குழாமின் பிரதானியான யோசித ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கோவிட் -19 வைரஸால் பாதிக்கப்பட்டு கொழும்பில் உள்ள தனியார் வைத்தியசாலையின் தீவிர சிகிச்சையில் இருக்கிறாரென பரவிய தகவலையடுத்து, இத்தகைய தகவல்கள் பொய்யானவை என்றும், பிரதமர் நலமாக இருப்பதாகவும் யோசித கூறினார்.

"பிரதமர் தனது தினசரிப் பணியைச் செய்து வருகிறார். இன்று(நேற்று) காலை கோவிட் - 19 செயலணி கூட்டத்தில் கலந்துகொண்டார். இந்த நெருக்கடியான நேரத்தில், இந்த தொற்றுநோயை சமாளிக்க நாடு கவனம் செலுத்தவேண்டிய நேரத்தில் தவறான தகவல்களை பரப்ப வேண்டாம் என்று நான் மக்களை கேட்டுக்கொள்கிறேன்" என்று யோசிதா கூறினார்.

# தமிழக முதல்வர் ஸ்டாலினுக்கு நன்றி தெரிவித்து செல்வம் கடிதம்

மன்னார், ஓக. 28

ஈழத் தமிழர்களுக்காக தமிழக முதல்வர் ஸ்டாலின் எடுத்த நடவடிக்கைக்கு நன்றிகளை தெரிவித்துக்கொள்வதாக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டில் அகதிமுகாம்களில் வசிக்கும் ஈழத்தமிழர்களின் நலன்கருதி பல்வேறு நலத்திட்டங்களை முதல்வர் மு.க. ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவருக்கு நன்றி தெரிவித்து அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே பாராளுமன்ற உறுப்பினர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்த கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இந்தியாவில் தமிழ்நாட்டில் வாழும் ஈழத்தமிழ் அகதிகளுக்காக தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள்



முன்னெடுத்த நடவடிக்கைகளுக்கு நன்றி தெரிவிக்கிறோம்.

நீண்ட காலமாக தமிழ்நாட்டிலே அகதி முகாம்களில் வாழ்ந்து கொண்டிருக்கும் ஈழத் தமிழ் உறவுகளுக்கு நிரந்தரமான வதிவிட வசதிகளையும், அவர்களுடைய எதிர்கால நலன் கருதிய வளர்ச்சித் திட்டங்களையும் அறிவித்துள்ளீர்கள். அத்துடன், நம்முடைய சந்ததிகளின் உயர்கல்விக்கான உதவித் திட்டத்தையும் மற்றும் இலங்கையில் மீள குடியமர விரும்புகின்றவர்கள் தொடர்பான தீர்மானங்களை முன்னெடுப்பதற்கான குழுவினையும் அமைத்து ஆக்கபூர்வமாக நடவடிக்கையை நீங்கள் முன்னெடுத்திருக்கிறீர்கள்.

முதன்முறையாக தமிழ்நாடு சட்டசபையில் ஒரு முதல்வர் இப்படியான திட்டங்களை அறிவித்ததோடு அதற்கான நிதி ஒதுக்கீட்டையும் வழங்கி ஆக்கபூர்வமான செயல் திட்டத்தையும் நடைமுறைப்படுத்தி இருப்பதற்கு தங்களுக்கு எமது மக்கள் சார்பாக உளம் கனிந்த நன்றியையும் தங்களது நல்லாட்சி தொடர்வதற்கு வாழ்த்துக்களையும் தெரிவிக்கிறேன்- என்றுள்ளது.

# றிஷாத் பதியுதீனின் மாமனுக்கு தொற்று

கொழும்பு, ஓக. 28

சிறுமி ஹிஷாலினி உயிரிழந்த வழக்கில் கைதான முன்னாள் அமைச்சர் றிஷாத் பதியுதீனின் மாமனார் கோவிட் 19 வைரஸ் தொற்றுக்கு உள்ளானதால் அவரை பிணையில் விடுவிக்குமாறு சட்டத்தரணிகள் விடுத்த கோரிக்கையை கொழும்பு மேலதிக நீதிவான் லோச்சனி அபேவிக்ரம நேற்று நிராகரித்தார்.

சந்தேக நபருக்கு கொவிட் தொற்று இருந்தால் அவருக்கு தேவையான சிகிச்சையை வழங்க உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு சிறை கண்காணிப்பாளருக்கு நீதிவான் உத்தரவிட்டார்.

வழக்கின் இரண்டாவது சந்தேக நபரான அலி இப்ராகிம் சைபு கிதார் முகமது சிஹாப்தீன் சார்பாக ஜனாதிபதி சட்டத்தரணி அனுஜ பிரேமரத்ன முன்னிலையாக இந்த பிணை கோரிக்கையை சமர்ப்பித்தார்.

தனது வாடிக்கையாளருக்கு கோவிட் நோய்க்கு எதிரான இரண்டாவது தடுப்பூசி கிடைக்கவில்லை என்றும், அவரது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட வாய்ப்பு உள்ளதாகவும் கூறினார்.

சிறைச்சாலை கைதி ஒருவருக்கு கோவிட் தொற்று இருப்பதாக கூறி பிணை வழங்க முடியாது என்றும், அவருக்கு சிகிச்சை அளிக்க சிறை கண்காணிப்பாளருக்கு உத்தரவு பிறப்பிக்கலாம் என்றும் நீதிபதி கூறினார்.

பிணை மனுவை நிராகரித்த நீதிமன்றம், சந்தேக நபருக்கு தேவையான சிகிச்சை அளிக்க சிறை கண்காணிப்பாளருக்கு உத்தரவிட்டது.

# வெளிநாடு பயணமாவோருக்கே இலத்திரனியல் தடுப்பூசி அட்டை

கொழும்பு, ஓக. 28

வெளிநாடுகளுக்குச் செல்பவர்களுக்கு மாத்திரமே இலத்திரனியல் தடுப்பூசி அட்டை வழங்கப்படும். சுகாதார அமைச்சின் இணைத்தளத்தினூடாக விண்ணப்பிப்பதன் மூலம் 5 - 7 நாள்களுக்குள் அவற்றைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று சுகாதார அமைச்சின் தரவுகள் பிரிவின் பணிப்பாளர் மருத்துவர் பாலித கருணாபேம தெரிவித்தார்.

சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்-

தற்போது சாதாரண தடுப்பூசி அட்டைகளே நாட்டில் வழங்கப்படுகின்றன. எனவே வெளிநாடுகளுக்குச் செல்பவர்களுக்கு அது பாதுகாப்பற்றது என்பதால் இலத்திரனியல் தடுப்பூசி அட்டையை வழங்க தீர்மானிக்கப்பட்டது. இந்த அட்டையின் ஊடாக எந்த போலியான விடயங்களையும் முன்னெடுக்க முடியாது.

சுகாதார அமைச்சின்



இணையத்தளத்தினூடாக விண்ணப்பிப்பதன் இதனைப் பெற்றுக் கொள்ள முடியும். கடந்த புதன்கிழமை இதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

24 மணித்தியாலங்களுக்குள் இலத்திரனியல் தடுப்பூசி அட்டையைப் பெற்றுக் கொள்வதற்கு 1000 விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

சரியான தகவல்கள் வழங்கப்பட்டால் மாத்திரமே அதனைப் பெற்றுக் கொள்ள முடியும். வழங்கப்படும் தகவல்கள் உண்மையானவையா என்பது உறுதிப்படுத்தப்பட்ட பின்னர், அது குறித்த மேலதிக தகவல்கள் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படும்-என்றார்.

## கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட இருவர் கைது!

கிளிநொச்சி, ஓக. 28

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் சட்டவிரோதமான முறையில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தருமபுரம் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலை அடுத்து தருமபுரம் பிரிவுக்குட்பட்ட மாயவனூர் பகுதியில் இடம்பெற்றுவந்த சட்டவிரோத கசிப்பு உற்பத்தி நிலையம் நேற்று முற்றுகையிடப்பட்டது.

இதன் போது சட்டவிரோத கசிப்பு உற்பத்தியிலீடுபட்ட சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டதுடன் அவரிடமிருந்து 42 லீற்றர் கசிப்பும், கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் உபகரணங்களும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரால் கைப்பற்றப்பட்டன.

இதேவேளை, புதுக்காடு இரமநாதபுரம் பகுதியில் சட்டவிரோத கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட சந்தேகநபர் ஒருவரும் கைது செய்யப்பட்டார்.

அவரிடமிருந்து 21 லீற்றர் கசிப்பும் பறிமுதல் செய்யப்பட்டதுடன் சந்தேகநபர்கள் தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதாக தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

# திருமலையில் இதுவரை 218 கொரோனா மரணம்!



கொழும்பு, ஓக. 28

திருகோணமலை மாவட்டத்தில் இதுவரைக்கும் 218 கொரோனா மரணங்கள் மொத்தமாக பதிவாகிய நிலையில் இம்மாதம் மாத்திரம் 69 மரணங்கள் ஏற்பட்டுள்ளனவென திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் டி.ஜீ.எம். கொஸ்தா தெரிவித்தார்.

திருகோணமலையில் அமைந்துள்ள பிராந்திய சுகாதார சேவைகள் பணியகத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இதனை தெரிவித்தார்.

கோமரங்கடவல பிரதேச வைத்தியசாலை கொரோனா இடைத்தங்கல் முகாம் ஆரம்பிக்கப்பட்ட நாள் முதல் நோயாளர்களுக்கு ஏற்ற விதத்தில் உணவு வழங்கப்பட்டு வந்ததாகவும் தற்போது நோயாளர்களுக்கு உண்ண முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் நோயாளர்கள் குற்றம் சுமத்தி இருந்தனர்.

இது குறித்து நோயாளர்கள் தங்களது அதிருப்தியை சமூக வலைத்தளங்களில் பதிவிட்டு இருந்தனர்.

இது தொடர்பில் திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரிடம் கேட்டபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

மேலும் திருகோணமலை மாவட்டத்தில் இதுவரை 8,500க்கும் மேற்பட்ட நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாகவும், ஒகஸ்ட் மாதம் மாத்திரம் 3300 நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதுவரை திருகோணமலை மாவட்டத்தில் 218 நோயாளர்கள் மரணித்துள்ளதாகவும், இந்த மாதம் மட்டும் 69 நோயாளர்கள் மரணித்தனரெனவும் அவர் கூறினார்.

அத்துடன் நோயாளர்களின் வீதம் அதிகரித்து வருவதினால் கிண்ணியா மற்றும் மூதூர் வைத்தியசாலைகளில் கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மேலும் இட வசதிகளை அமைத்து வருவதாகவும் இன்று முதல் இரண்டாவது தடுப்பூசிகளை வழங்கவுள்ளதாகவும் திருக்கோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டி.ஜீ.எம்.கொஸ்தா மேலும் தெரிவித்தார்.

ஈழநாடு



# காணாமல் ஆக்கப்பட்ட அருட்தந்தை!

## 15 ஆண்டுகளாகியும் வெளிவராத உண்மை

■ ருக்கி பெர்னாண்டோ



கத்தோலிக்க அருட்தந்தையான ஜிம் பிறவுண் மற்றும் அவரின் உதவியாளரான வென்சலோஸ் விமலதாஸ் ஆகியோர் 2006 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 20ஆம் திகதி காணாமல் ஆக்கப்பட்டார்கள். கடற்படையின் கட்டுப்பாட்டின்கீழ் இருந்து வந்த கிராமத்தில் வசித்த இடம்பெயர்ந்த மக்களை பார்வையிடுவதற்காக அவர்கள் சென்று கொண்டிருந்தார்கள். யாழ்ப்பாண மாவட்டத்தில் அல்லைப்பிட்டியில் அமைந்திருக்கும் கடற்படையினரின் சோதனைச் சாவடியில் அவர்களை ஆட்கள் இறுதியாகப் பார்த்திருந்தார்கள்.

அல்லைப்பிட்டி கிராமத்தைப் பொறுத்தவரையில் ஒகஸ்ட் துன்பங்கள் நிறைந்த மாதமாக இருந்து வந்துள்ளது. போரிலிருந்து தப்பி, உள்ளூர் கத்தோலிக்க தேவாலயத்திற்கு தஞ்சம்கோரி வந்திருந்த பொது மக்களை ஒகஸ்ட் 12ஆம் திகதி இரவு அருட்தந்தை பிறவுண் வரவேற்றிருந்தார். ஆனால், இந்த தேவாலயமும் தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டதுடன், தேவாலய வளவுக்குள் 36 பேர் கொல்லப்பட்டார்கள். மேலும் பலர் காயமடைந்தனர். காயமடைந்தவர்களை அழைத்து செல்வதற்கு அனுமதிக்க வேண்டும் என அருட்தந்தை பிறவுண் கடற்படை அதிகாரிகளிடம் மன்றாடி கேட்டுக் கொண்டிருந்தார். முன்னர் மே மாதத்தில் இந்த கிராமத்தில் நான்கு மாதக் குழந்தை மற்றும் நான்கு வயதுடைய பிள்ளை ஆகியோர் உட்ட ஒன்பது பேர் கொல்லப்பட்டார்கள்.

பெருமளவுக்கு இராணுவ மயமாக்கப்பட்டிருந்த யாழ்ப்பாண மாவட்டத்திலும், நாட்டின் ஏனைய பாகங்களிலும் பெருந்தொகையான தமிழர்கள் வலிந்து காணாமல் ஆக்கப்படும் சம்பவங்களுக்கு இரையாகி வந்த ஒரு காலப் பிரிவாக அது இருந்து வந்தது. அவர் ஒரு கத்தோலிக்க அருட்தந்தையாக இருந்து வந்த காரணத்தினால் காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம் நன்கு அறியப்பட்ட ஒரு சம்பவமாக இருந்து வந்தது. ஒரு கத்தோலிக்க அருட்தந்தை காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக கூட உண்மை மற்றும் நீதி என்பன ஒருபோதும் கிடைக்கப் போவதில்லை என்ற விடயத்தை கடந்த 15 ஆண்டுகள் எடுத்துக் காட்டியுள்ளன.

அவர் காணாமல் ஆக்கப்பட்டு கிட்டத்தட்ட மூன்று வருடங்களுக்குள் 2009 மே மாதம் போரின் இறுதி நாளன்று மற்றொரு கத்தோலிக்க அருட் தந்தையான பிரான்சிஸ் ஜோசப் காணாமல் போனார். அவர் இராணுவத்தினரிடம் சரணடைவதனையும், ஒரு பேருந்தில் ஏற்றிச் செல்லப்படுகின்றமையையும் இறுதியாக மக்கள் பார்த்திருந்தார்கள். வேறு சில கத்தோலிக்க அருட் தந்தையரும் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர் - கொலை செய்யப்பட்டும் உள்ளார்கள்.

அவர்கள் அனைவரும் அடக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்டிருந்த பொதுமக்களுக்கு ஆதரவளிப்பதற்கு முன்வந்தவர்களாகவும், அநீதிகளுக்கு எதிராக தமது குரல்களை எழுப்பியவர்களாகவும் இருந்து வந்துள்ளார்கள். காணாமல் ஆக்கப்பட்டிருக்கும் இலங்கையர்கள் தொடர்பாக அரச நிறுவனங்களுக்கு 65 ஆயிரத்துக்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

அருட் தந்தை பிறவுண் கடைசியாக காணப்பட்ட கடற்படை சோதனைச் சாவடியின் பதிவேட்டை பொலிஸாரிடம் ஒப்படைக்குமாறு பதில் நீதிவான் கட்டளையிட்டிருந்த போதிலும், அப்பதிவேட்டை கையளிப்பதற்கு கடற்படையினர் மறுத்துள்ளார்கள் என ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் எழுதிய ஒரு கட்டுரையில் டி. பி. எஸ். ஜெயராஜ் குறிப்பிட்டிருந்தார். நீதிவான் மற்றும் பொலிஸார் அல்லைப்பிட்டி கிராமத்திலிருந்து திரும்பிச் செல்லும்போது கடற்படையினர் ஆகாயத்தை நோக்கி துப்பாக்கி வேட்டுக்களை தீர்த்தனரெனவும் ஜெயராஜ் அறிக்கையிட்டுள்ளார்.

மனித உரிமைகளுக்கான யாழ்ப்பாண பல்கலைக் கழக ஆசிரியர்கள் அமைப்பு (UTHR – Jaffna ) 2007ஆம் ஆண்டில் வெளியிட்ட ஓர் அறிக்கையில் இதனை ஒத்த ஒரு விளக்கத்தை முன்வைத்திருந்தது. அந்த இரு அறிக்கைகளும் கடற்படையினர் அருட்தந்தை பிறவுணை பகைமையுடன் நோக்கியிருந்தனரெனவும், அருட்தந்தை பிறவுண் கடற்படை முகாமை வந்தடைந்த நேரம், கடற்படையினர் குறிப்பிடும் நேரத்திலும் பார்க்க வேறுபட்டதாக இருந்தது என்பதனை மற்றொரு கத்தோலிக்க அருட் தந்தையின் நேரடிச் சாட்சியம் குறிப்பிடுகின்றது என்பதனையும் சுட்டிக்காட்டியிருந்தன.

**“ தனது மகனுக்கு என்ன நேர்ந்தது என்பதனை அறியாமலேயே அருட்தந்தை பிறவுணின் தாயார் காலமானார். நான் அவர்களுடைய வீட்டுக்குச் செல்லும் சந்தர்ப்பங்களில் எல்லாம் அவருடைய வயது முதிர்ந்த தந்தை, தான் மரணிப்பதற்கு முன்னர் தனது மகனுக்கு என்ன நேர்ந்தது என்பதனை அறிந்து கொள்ள முடியுமா என்பது குறித்து கவலையுடன் கேட்பது வழக்கம்.**

அருட்தந்தை பிறவுண் காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம், 2006 மே மாதத்தில் அல்லைப்பிட்டியில் இடம்பெற்ற படுகொலைகள் மற்றும் இரு அயல் கிராமங்களில் நான்கு பேர் கொல்லப்பட்ட சம்பவங்கள் என்பன தொடர்பாக 2006ஆம் ஆண்டில் நியமனம் செய்யப்பட்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு விசாரணை செய்ய வேண்டுமென பணிக்கப்பட்டிருந்த பாரதூரமான மனித உரிமைகள் மீறல்களில் 16 இல் ஒன்றாகும். 2009 மே மாதத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அந்த ஆணைக்குழுவின் அறிக்கை போதியளவில் சான்றுகள் இல்லாதிருப்பதனாலும், “மரணமடைந்ததாகக் கூறப்படுபவரின் சடலம்” கண்டுபிடிக்கப்படாத காரணத்தாலும் அருட்தந்தை பிறவுணின் சம்பவம் தொடர்பாக விசாரணைகள் நடத்தப்படவில்லை எனக் குறிப்பிடுகின்றது. அல்லைப்பிட்டி படுகொலைகளை விசாரணை செய்வதற்கு போதிய கால அவகாசம் கிடைக்கவில்லை எனவும் ஆணைக்குழு குறிப்பிட்டிருந்தது.

தனது மகனுக்கு என்ன நேர்ந்தது என்பதனை அறியாமலேயே அருட்தந்தை பிறவுணின் தாயார் காலமானார். நான் அவர்களுடைய வீட்டுக்குச் செல் லும் சந்தர்ப்பங்களில் எல்லாம் அவருடைய வயது முதிர்ந்த தந்தை, தான் மரணிப்பதற்கு முன்னர் தனது மகனுக்கு என்ன நேர்ந்தது என்பதனை அறிந்து கொள்ள முடியுமா என்பது குறித்து கவலையுடன் கேட்பது வழக்கம்.

**தேவாலயங்கள் மீதான தாக்குதல்கள்**

போர் இடம்பெற்ற காலப் பகுதியின்போது தேவாலயங்களுக்கு உள்ளே வைத்து பொதுமக்கள் கொல்லப்பட்ட யாழ்ப்பாண மறை மாவட்டத்தைச் சேர்ந்த ஒரேயொரு தேவாலயமாக அல்லைப்பிட்டி கத்தோலிக்க தேவாலயம் மட்டும் இருந்துவிடவில்லை. நவாலி கத்தோலிக்க தேவாலயத்தின் மீதும், அதனைச் சூழவுள்ள கிராமத்தின் மீதும் 1995ஆம் ஆண்டு ஜூலை மாதம் ஒரு விமானத் தாக்குதல் நிகழ்த்தப்பட்டதன் விளைவாக சுமார் 147 பொதுமக்கள் கொல்லப்பட்டார்கள். அவர்களில் பெரும்பாலானவர்கள் இடம்பெயர்ந்தவர்களாக இருந்து அந்தத் தேவாலயத்தில் தஞ்சம் புகுந்திருந்தவர்களாவர். 1993ஆம் ஆண்டு குருநகர் கத்தோலிக்க தேவாலயத்தின் மீது நிகழ்த்தப்பட்ட குண்டு தாக்குதல்களின் போது பல பொதுமக்கள் கொல்லப்பட்டார்கள்.

2019ஆம் ஆண்டில் முற்றிலும் வேறுபட்ட ஒரு பின்புலத்தில், உயிர்த்த ஞாயிறு தற்கொலைத் தாக்குதல்தாரிகள் கொழும்பு மறை மாவட்டத்தை சேர்ந்த இரண்டு கத்தோலிக்க தேவாலயங்கள் மீதும், மட்டக்களப்பு சியோன் தேவாலயத்தின் மீதும் தாக்குதல்களை நடத்தியிருந்தார்கள். இந்தத் தாக்குதல்களின் விளைவாக மூன்று தேவாலயங்களில் சுமார் 200 பேர் கொல்லப்பட்டார்கள். அதே நேரத்தில் ஹோட்டல்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களில் மேலும் 70 மரணங்கள் நிகழ்ந்தன. இந்தத் தாக்குதல்களில் மொத்தம் 600 பேர் காயமடைந்தனர் என்று மதிப்பிடப்பட்டிருந்தது.

இந்தத் தாக்குதல்கள் இடம்பெற்று இரண்டு வருடங்கள் மற்றும் நான்கு மாதங்களின் பின்னர் வீடுகளில் கறுப்புக் கொடிகளை ஏற்றி வைப்பதன் மூலமும், தேவாலயங்களில் மணியை ஒலிக்கச் செய்வதன் மூலமும் உண்மை மற்றும் நீதி என்பவற்றுக்கான கோரிக்கையை முன்வைத்து, ஓர் எதிர்ப்பு செயல்பாட்டை முன்னெடுக்குமாறு கொழும்பு மறை மாவட்டம் ஒரு வேண்டுகோளை விடுத்திருந்தது. உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுக்கு நீதி கோரி இந்த ஆண்டு மார்ச் மாதம் நிகழ்த்தப்பட்ட கறுப்பு ஞாயிறு எதிர்ப்பு நிகழ்வுக்கு இணையான விதத்தில் கறுப்புக் கொடிகளை காட்ட வேண்டும் என முன்வைக்கப்பட்டிருக்கும் வேண்டுகோள் ஊடகங்களில் ஏற்கனவே பரவலான கவனத்தைப் பெற்றுள்ளது.

கொழும்பு பேராயர் கார்டினல் மல்கம் ரஞ்சித் அவர்களும், மேலும் பல கத்தோலிக்கர்களும் உண்மை மற்றும் நீதி என்பவற்றுக்கான உள்நாட்டு செயன்முறைகளில் தமக்கு நம்பிக்கையோ விசுவாசமோ இல்லை எனக் கருத்துத் தெரிவித்துள்ளார்கள். இது தொடர்பாக சர்வதேச ரீதியில் நீதி கிடைக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டுள்ளார்கள். அருட்தந்தை பிறவுண் காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம் போன்ற சம்பவங்களையும் உள்ளடக்கிய விதத்தில் இந்தக் கோரிக்கைகளும், உணர்வுகளும் பல தசாப்தகாலம் (கத்தோலிக்கர்களையும் உள்ளடக்கிய விதத்தில்) தமிழர்கள் முன்வைத்து வந்திருக்கும் கோரிக்கைகளை எதிரொலிப்பவைகளாகவே இருந்து வருகின்றன. அது தேசிய அல்லது சர்வதேச செயன்முறையாக எப்படி இருந்து வந்தாலும் சரி, பல்வேறு இனத்துவக் குழுக்களால் மேற்கொள்ளப்படும் கூட்டு முயற்சிகள் நீதிக்கான போராட்டங்களை வலுப்படுத்துவதுடன், தோழமை மற்றும் சகவாழ்வு என்பவற்றையும் வலுப்படுத்த முடியும்.

நன்றி: மாற்றம் ■



# அடுத்த தலைமுறை பாதுகாப்பாக இல்லை குழந்தைகள் குறித்த யுனிசெவ் எச்சரிக்கை!

■ ப.சுகுணம்

பூமியில் வாழும் 2.2 பில்லியன் குழந்தைகளில் 10 கோடி குழந்தைகள் காலநிலை நெருக்கடி மற்றும் மாசுபாட்டுப் பிரச்னைகளால் பாதிக்கப் படும் ஆபத்தான நிலையில் இருப்பதாக ஐ.நா வெளியிட்ட சமீபத்திய ஆய்வறிக்கை எச்சரித்துள்ளது. ஐக்கிய நாடுகளின் குழந்தைகளுக்கான அமைப்பு (UNICEF), வெளியிட்ட இந்த ஆய்வறிக்கை, பூமியில் வாழும் மொத்த குழந்தைகளில் பாதி பேர் இந்த ஆபத்தில் இருப்பதாகக் கூறுகிறது.

இந்த அறிக்கைப்படி, கிட்டத்தட்ட இப்புவியில் வாழும் அனைத்து குழந்தைகளுமே ஏதாவதொரு வகையில், வெப்ப அலை, வெள்ளம், சூறாவளி, நோய்த் தாக்குதல், வறட்சி, நீர் மற்றும் காற்று மாசுபாடு என்று ஏதேனும் ஒருவிதமான பாதிப்புக்காவது உள்ளாகின்றனர். அதிலும், இந்தியா, நைஜீரியா, பிலிப்பைன்ஸ் மற்றும் ஆபிரிக்காவின் துணை நாடுகள் உட்பட மொத்தம் 33 நாடுகளில் வாழும் 100 கோடி குழந்தைகள் ஒரே நேரத்தில் மூன்று முதல் நான்கு பாதிப்புகளை எதிர்கொள்ளும் நிலையில் இருக்கின்றனர்.

காலநிலை மற்றும் சுற்றுச்சூழல் பாதிப்புகளை வெளிப்படுத்தக் கூடிய வரைபடங்களையும் அதில் குழந்தைகள் அதிகமாகப் பாதிக்கப்படும் பகுதிகள் குறித்த வரைபடங்களையும் உள்ளடக்கிய முதல் ஆய்வறிக்கையாக இது கருதப்படுகிறது. இதில், வறுமை, சுத்தமான நீர் கிடைக்காமை, சுகாதாரக் குறைபாடு, கல்வியின்மை போன்ற பிரச்னைகளுக்கு உள்ளாகும் குழந்தைகள் வாழும் பகுதிகளும் வரைபடமாக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் காலநிலை மாற்றத்தின் விளைவுகளை எதிர்கொள்ளும் திறனைப் பெறுவதற்கான வாய்ப்புகள் குழந்தைகளுக்கு எந்தளவுக்குக் கிடைக்கின்றன என்பதை இவற்றின் மூலம் வெளிக்கொணர இந்த ஆய்வில் ஈடுபட்ட ஆய்வாளர்கள் முயன்றனர்.

> **ஆபத்துகள் நிறைந்திருந்தாலும், நம்மிடையே இன்னும் நேரம் இருக்கிறது. குழந்தைகளுக்கான அத்தியாவசிய சேவைகளை வழங்குவதில் எந்த சமரசமும் இன்றிச் செயல்பட வேண்டும். அதுவே, அவர்களுக்கு காலநிலை பேரிடர்களை எதிர்கொள்ளும் திறனை வழங்கும். ஆகையால், ஐ.நா குழந்தைகளுக்கான அமைப்பு, அரசுகளிடம் குழந்தைகள் பாதுகாப்பு நடவடிக்கைகளில் உடனடியாகவும் தீவிரமாகவும் ஈடுபட வேண்டும்**

குழந்தைகள் உலக அளவில், "எங்கள் எதிர்காலம் எங்கே?" என்று அரசுகளைக் கேள்வியெழுப்பத் தூண்டுகோலாக அமைந்த, கிரெட்டா துன்பெர்க் பள்ளி புறக்கணிப்புப் போராட்டம் நடத்தியதன் மூன்றாம் ஆண்டு நினைவு நாளன்று இளம் காலநிலை போராளிகளின் முன்னிலையில் இந்த அறிக்கை வெளியிடப்பட்டது. கொரோனா தொற்றுப் பேரிடர் காரணமாக தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இந்த உலகளாவிய போராட்டங்களை செப்ரெம்பர் 24ஆம் தேதி முதல் மீண்டும் தொடங்கவும் இளம் காலநிலை போராளிகள் திட்டமிட்டுள்ளனர்.

இந்த ஆய்வறிக்கையை வெளியிட்டுப் பேசிய ஐ.நா குழந்தைகள் அமைப்பின் செயல் இயக்குநர் ஹென்ரியெட்டா ஃபோர், "இந்த ஆய்வு, முதல்முறையாக, உலக அளவில் குழந்தைகள் எங்கு, எப்படி காலநிலை மாற்றத்தால் என்ன மாதிரியான விளைவுகளைச் சந்திக்கிறார்கள் என்பது குறித்து தெளிவாக எடுத்துக்காட்டுகிறது. அது எதிர்பார்க்க முடியாத அளவுக்கு மோசமாகவும் உள்ளது. இதன்மூலம், அனைத்துக் குழந்தைகளுமே ஏதேனும் ஒரு வகையிலாவது காலநிலை நெருக்கடியால் சிக்கலுக்கு உள்ளாவதும் எந்தக் குழந்தையுமே பாதுகாப்பாக இல்லையென்பதும் தெரியவந்துள்ளது" என்று கூறியுள்ளார்.

மேலும், "காலநிலை பேரிடர்களுக்கு எளிதில் பாதிக்கப்படக்கூடிய நிலையில்தான் குழந்தைகள் இருக்கிறார்கள். பெரியவர்களோடு ஒப்பிடுகையில், குழந்தைகள் அவர்களுடைய வளர்ச்சிக் காலகட்டத்தில் இருப்பதால், உணவு மற்றும் தண்ணீர் அதிகம் தேவைப்படுகிறது. ஆனால், அதீத பருவநிலை நிகழ்வுகள் அவர்களுக்கான உணவு உற்பத்தியில் பற்றாக்குறையை ஏற்படுத்துகிறது" என்றார்.

காலநிலை நெருக்கடி குழந்தைகளின் மீது மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்துவதால், காலநிலை பேச்சுவார்த்தை களிலும் அதுகுறித்த முடிவுகளை எடுப்பதிலும் இளம் தலைமுறை பிரதிநிதிகளையும் ஈடுபடுத்த வேண்டும் என்று இந்த அறிக்கை வலியுறுத்துகிறது. குறிப்பாக, வரும் நவம்பரில் ஸ்கொட்லாந்திலுள்ள க்ளாஸ்கோவில் நடக்கவிருக்கும் 26-வது காலநிலை உச்சிமாநாட்டில் இளம் தலைமுறை பிரதிநிதிகளும் பங்கெடுக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறது. "26ஆவது உச்சி மாநாட்டில் எடுக்கப்படும் முடிவுகள் அவர்களுடைய எதிர்காலத்தின்மீது தாக்கம் உண்டாக்கும் என்பதால், இந்தப் பூமியின் மீதுள்ள அவர்களுடைய உரிமை மற்றும் பங்கு இந்த மாநாட்டிலேயே அங்கீகரிக்கப்பட வேண்டும்" என்கிறார் ஹென்ரியெட்டா ஃபோர்.

இந்த அறிக்கை குறித்து தன் கருத்துகளைத் தெரிவித்த கிரெட்டா துன்பெர்க், "நாங்கள் இதற்கு பாதிக்கப்படுபவர்கள் மட்டுமல்ல, எதிர்காலத்துக்கான போராட்டத்தை முன்னின்று நடத்திக் கொண்டிருப்பவர்கள். எங்களைப் போன்ற இலட்சக்கணக்கான இளம் தலைமுறையினர் ஒன்றிணைந்து களத்தில் இறங்கிக் கொண்டிருக்கிறார்கள். இந்தப் போராட்டம் சரியான பாதையில்தான் சென்றுகொண்டிருக்கிறது. ஆனால், உலகம் இன்னமும் காலநிலை நெருக்கடியை அவசரகால பிரச்னையாகக் கையாளத் தொடங்கவில்லை. நாம் இன்னமும் உரிய நடவடிக்கைகளை அவசரகால அடிப்படையில் எடுப்பதை விட்டுவிட்டு, பேசிக் கொண்டேயிருக்கிறோம். இது செயல்பட வேண்டிய காலகட்டம்" என்று கூறியுள்ளார்.

தன்னுடைய கருத்துகளைப் பகிர்ந்துகொண்ட, ஸிம்பாப்வே நாட்டைச் சேர்ந்த காலநிலைப் போராளி Nkosilathi Nyathi "காலநிலை மாற்றத்தால் நான் தனிப்பட்ட அளவில் பாதிக்கப்பட்டுள்ளேன். வெப்ப அலைகளும் வெள்ளப் பேரிடர்களும் நான் பள்ளிக்குச் செல்வதைச் சிக்கலாக்கின. எங்கள் ஊரிலுள்ள விவ சாயிகள் கணிக்க முடியாத பருவநிலையால் திணறி வருகிறார்கள். குழந்தைகளை இதுபோன்ற முடிவெ டுக்கும் தளங்களில் பங்கெடுக்க வைக்க வேண்டும் என்பதில் நான் மிகவும் தீர்க்கமாக இருக்கிறேன்" என்று கூறியுள்ளார்.

காலநிலை பிரச்னைகள் இனி வரும் நாள்களில் மிகவும் தீவிரமடையும். ஆனால், உலக அளவில் இதனால் அதிகமான பிரச்னைகளை எதிர்கொள் ளப்போகும் முதல் 10 நாடுகள் வெளியிடக்கூடிய கரிம வாயுவின் அளவு 0.5% மட்டுமே. அறிக்கைப்படி, உலக அளவில் 92 கோடி குழந்தைகள் தண்ணீர் பற்றாக்குறையால் அவதிப்படு கிறார்கள். அதேபோல், 82 கோடி குழந்தைகள் வெப்ப அலை பாதிப்புகளுக்கு, 60 கோடி குழந்தைகள் மலேரியா, டெங்கு போன்ற நோய்த் தாக்குதல்களுக்கு, உள்ளாகும் ஆபத்தில் இருக்கிறார்கள்.

"ஆபத்துகள் நிறைந்திருந்தாலும், நம்மிடையே இன்னும் நேரம் இருக் கிறது. குழந்தைகளுக்கான அத்தியாவசிய சேவைகளை வழங்குவதில் எந்த சமரசமும் இன்றிச் செயல்பட வேண்டும். அதுவே, அவர்களுக்கு காலநிலை பேரிடர்களை எதிர்கொள் ளும் திறனை வழங்கும். ஆகையால், ஐ.நா. குழந்தைகளுக்கான அமைப்பு, அரசுகளிடம் குழந்தைகள் பாது காப்பு நடவடிக்கைகளில் உடனடி யாகவும் தீவிரமாகவும் ஈடுபட வேண்டும், பசுமை இல்ல வாயு வெளியீட்டைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளைத் தீவி ரப்படுத்த வேண்டுமென்று வலியுறுத்துகிறது" என்று கூறியுள்ளார் ஐ.நா குழந்தை கள் அமைப்பின் செயல் இயக்குநர் ஹென்ரியெட்டா ஃபோர்.



26ஆவது காலநிலை உச்சிமாநாடு அதற்கான தொடக்கமாக இருக்க வேண்டும். நீண்டகாலமாக வெற்று உறுதிமொழிகளும் செயல்படாதத் திட்டங்களுமே விவாதிக்கப்படுகின்றன. இந்த முறை இது மாற வேண்டும்.


நன்றி :விகடன்

# புலமைச் சிகரம்


## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை
வினாத்தாள் - I

- 1, 2 ஆகிய வினாக்களில் தொடக்கத்தில் தரப்பட்டுள்ள உருவை ஒத்த உருவைத் தெரிவு செய்க.


1. 

(1) (2) (3)

2. 

(1) (2) (3)


- உரு A ஐ ஒத்த ஓர் உருவைப் பெறுவதற்கு உரு B இல் செய்ய வேண்டிய மாற்றங்களின் எண்ணிக்கை எத்தனை?


3. 

உரு A  உரு B


(1) 2  (2) 3  (3) 4


- 4, 5 ஆகிய வினாக்களில் வெறுமையாய் உள்ள அடைப்புக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

4. 




(1) (2) (3)

5. 




(1) (2) (3)


6. ஒரே கூட்டத்தைச் சேர்ந்த பொருள்கள் இடம்பெறும் அடைப்பைத் தெரிவு செய்க.



(1) (2) (3)

7. கட்டத்தினுள் உள்ள தொகுதியுடன் சேர்ப்பதற்கு மிகப் பொருத்தமான உருவைத் தெரிவு செய்க.





(1) (2) (3)

- பின்வரும் கவிதையை வாசித்து 8, 9 ஆகிய வினாக்களுக்கு விடை தருக.

சின்னஞ் சிறிய பிள்ளைகளே
  சிறப்பாய் உடலில் நலம் பெறவே
எண்ணம் போல விளையாடி
  உழைக்க வேண்டும் சுறுசுறுப்பாய்

8. இப்பாடல் யாரை விளித்துப் பாடப்படுகிறது?
   (1) சுறுசுறுப்பாய் உழைப்பவர்களை விளித்து
   (2) விருப்பம் போல விளையாடுபவர்களை விளித்து
   (3) சின்னஞ் சிறிய பிள்ளைகளை விளித்து

9. சுறுசுறுப்பாய் உழைப்பதனால்,
   (1) தேக சுகம் பெறலாம்.
   (2) விருப்பம் போல விளையாடலாம்.
   (3) 'சிறந்த சிறுவர்கள்' என்று பெயர் பெறலாம்.

10. ○ □ □ △ = ⊙ ○ △ எனின், கீழுள்ள தொடர்புகளில் சரியானது எது?
   (1) ⊙ □ = ○
   (2) ○ △ = ⊙
   (3) □ □ = ⊙

# தனிமைப்படுத்தல் விதிகளை மீறிய 626 பேர் சிக்கினார்கள்!

கொழும்பு, ஓக. 28

நாட்டில் தனிமைப்படுத்தல் சட்டவிதிகளை மீறிய குற்றச்சாட்டில் மேலும் 626 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கொரோனாத் தொற்றுப் பரவுவதைத் தடுப்பதற்காக அமுல்படுத்தப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் சட்டவிதிகளை மீறிய குற்றச்சாட்டில் இதுவரை 59 ஆயிரத்து 621 பேர் கைதுசெய்யப்பட்டனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

இதேவேளை, மாகாணங்களுக்கு இடையிலான பயணக் கட்டுப்பாடு அமுலில் உள்ள நிலையில், மேல் மாகாணத்துக்கு நுழையும் மற்றும் அங்கிருந்து வெளியேறும் 13 இடங்களில் சோதனைச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, நேற்றுமுன்தினம் மேல் மாகாணத்தில் இருந்து வெளியேறும் பகுதியில், 307 வாகனங்களில் பயணித்த 515 நபர்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

மேலும், மேல் மாகாணத்துக்குப் பிரவேசித்த 302 வாகனங்களில் பயணித்த 580 பேர் சோதனைச்சாவடிகளில் சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர் என்றும் பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (இ)

# 'ஊரடங்கு' - 'லொக்டவுண்' மூலமாக மட்டும் கொரோனாவை கட்டுப்படுத்த முடியாது!

## மக்கள் அனைவரும் பொறுப்புணர்வுடன் செயல்பட வேண்டும் என்கிறார் சவேந்திர



**கொழும்பு, ஓக.28**

**"இலங்கையில் நாளாந்தம் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. தொடர் 'ஊரடங்கு' மூலம் அல்லது 'லொக்டவுண்' ஊடாகக் கொரோனாவைக் கட்டுப்படுத்த முடியும் என்று மக்கள் எண்ணக்கூடாது. மக்கள் அனைவரும் பொறுப்புணர்வுடன் செயல்பட்டாலே கொரோனாவை இல்லாமல் ஒழிக்கலாம்."**

- இவ்வாறு கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயல்பாட்டு மத்திய நிலையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"மக்கள் ஒவ்வொருவரும் சுகாதார விதிமுறைகளைக் கடைப்பிடித்துப் பொறுப்புணர்வுடன் செயற்பட வேண்டும். அப்போதுதான் கொரோனாவைக் கட்டுப்படுத்த முடியும்.

அதேவேளை, கொரோனாத் தடுப்பூசிகளையும் பெற்றுக் கொள்ள மக்கள் அனைவரும் முன்வர வேண்டும். எக்காரணம் கொண்டும் தடுப்பூசிகளைப் பெறுவதில் மக்கள் தயக்கம் காட்டக்கூடாது.

தடுப்பூசிகள்தான் எமக்குப் பாதுகாப்புக் கவசமாக இருக்கின்றது. தடுப்பூசிகளைப் பெற்றவர்களும் சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றி சமூகத்தில் பொறுப்புணர்வுடன் நடக்க வேண்டும்.

இலங்கையில் நேற்று (நேற்று முன்தினம்) 4 ஆயிரத்து 602 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர் களில் 5 பேர் வெளிநாடுகளிலிருந்து வந்தவர்கள். நாட்டில் நேற்று (நேற்று முன் தினம்) வரை 4 இலட்சத்து 12 ஆயிரத்து 370 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்" - என்றார். (இ)



# 20 இலட்சம் ரூபாய் பெறுமதியான கொக்கெய்ன் இருவர் கைது!

கொழும்பு, ஓக. 28

களனி, ஈரியவெட்டிய பிரதேசத்தில் மேற் கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பில், 20 இலட்சம் ரூபாய்க்கும் அதிக பெறுமதியுடைய ஒரு தொகை கொக்கெய்ன் போதைப்பொருள், விசேட அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

கார் ஒன்றில், ஆசனத்தில் தலைவைக்கும் பகுதியில் மிகவும் சூட்சுமமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 53 கிராம் 510 மில்லிகிராம் கொக்கெய்ன் போதைப்பொருள் இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது.

இந்தச் சுற்றிவளைப்பின் போது, சட்டவிரோத இறக்குமதிசெய்யப்பட்ட சுமார் 5 இலட்சம் ரூபாயை விட அதிக பெறுமதியான ஒருதொகை வெளிநாட்டு சிகரெட்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

நேற்றுமுன்தினம் பிற்பகல் 3.30 மணியளவில் முன்னெடுக்கப்பட்ட இந்தச் சுற்றிவளைப்பில், இரு சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு நேற்று தெரிவித்துள்ளது. இதன்போது, கைதான பிர தான சந்தேகநபர், இரண்டு மாதங்களுக்கு முன்னர் டுபாயி லிருந்து நாடு திரும்பியவர் எனத் தெரியவந்துள்ளது.

இந்தப் போதைப்பொருள் நாட்டுக்குக் கொண்டுவரப்பட்டதன் பின்னணியில், இலங்கையிலிருந்து தப்பிச்சென்று டுபாயில் தலைமறைவாகியுள்ள பிரபல போதைப்பொருள் கடத்தல் காரர் ஒருவர் தொடர்புபட்டிருக்கலாம் எனச் சந்தேகம் வெளியிட்டுள்ள பொலிஸார், அது தொடர்பில் கண்டறிய மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் இருவரும், குறித்த போதைப்பொருளுடன் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பணியகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலையில் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன. (இ)

# கொரோனா மரண எண்ணிக்கையை மறைக்கும் நோக்கம் அரசுக்கு இல்லை

## சுகாதார சேவைகள் பணிப்பாளர் கருத்து



கொழும்பு, ஓக. 28

"இலங்கையில் கொரோனா மரணங்களின் எண்ணிக்கையைக் குறைக்கும் நோக்கம் அரசுக்கு இல்லை. உண்மைத் தகவல்களையே ஊடகங்களுக்கு வழங்குகின்றோம்."

- இவ்வாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட மருத்துவ நிபுணர் அசேல குணவர்த்தன தெரிவித்தார்.

நாளாந்தக் கொரோனா மரணங்களின் எண்ணிக்கையை அரசு குறைத்து வருகின்றது என எதிரணியினரால் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்குப் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"இலங்கையில் கொரோனா மரணங்களின் எண்ணிக்கை தினந்தோறும் அதிகரித்து வருகின்றது. அந்த எண்ணிக்கையை அப்படியே ஊடகங்களுக்குத் தெரியப்படுத்துகின்றோம். மரண எண்ணிக்கையில் குறைப்பு எதையும் நாம் செய்யவில்லை. மரண எண்ணிக்கையைக் குறைக்கும் நோக்கம் சுகாதார அமைச்சுக்குக் கிடையாது.

நாளொன்றில் முதல் தடவையாக கடந்த 25ஆம் திகதி கொரோனா மரணங்களின் எண்ணிக்கை 200 ஐத் தாண்டியுள்ளது. 108 ஆண்கள், 101 பெண்கள் உள்ளிட்ட 209 பேர் கொரோனாத் தொற்றால் மரணித்துள்ளனர். இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தோரின் மொத்த எண்ணிக்கை 8 ஆயிரத்து 157 ஆக அதிகரித்துள்ளது.

கொரோனா மரணங்களின் எண்ணிக்கை அதிகரிப்பு நாட்டுக்கு நல்லதல்ல. இது நாட்டின் ஆபத்து நிலைமையை எடுத்துக்காட்டுகின்றது. எனவே, தனிமைப்படுத்தல் சட்டத்துக்கமைய இறுக்கமான கட்டுப்பாடுகளுடன் மக்கள் தமது அத்தியாவசிய நாளாந்தச் செயல்பாடுகளை முன்னெடுக்க வேண்டும்" - என்றார். (இ)

# இலங்கையில் கட்டுப்பாடின்றி நாளாந்தம் எகிறும் சீனி விலை

## மக்கள் பெரும் திண்டாட்டம்

கொழும்பு, ஓக.28

இலங்கையில் சீனியின் விலை கட்டுப்பாடின்றி நாளுக்கு நாள் உயர்வடைந்து செல்கின்றது.

இதற்கமைய தற்போது சந்தையில் ஒரு கிலோ கிராம் சீனியின் சில்லறை விலை 210 ரூபாய்க்கு மேல் அதிகரித்துள்ளது.

சில வாரங்களுக்கு முன்னர் 115 ரூபாய் முதல் 130 ரூபாய் வரையான விலைகளில் விற்பனையான சீனி கிலோ ஒன்றின் விலை தற்போது 210 ரூபாய் முதல் 220 ரூபாய் வரையில் விற்பனையாகின்றது என நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

105 ரூபாய்க்கு விற்பனை செய்யக்கூடிய சீனியே தற்போது 200 ரூபாய்க்கும் மேலான விலைகளில் விற்பனை செய்யப்படுகின்றது என நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், சீனி இறக்குமதி நிறுத்தப்பட்டுள்ள காரணத்தினாலேயே நாட்டில் அதன் விலைகள் அதிகரிக்கக் காரணமாக அமைந்துள்ளது என நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

அத்தியாவசியப் பொருட்களின் பட்டியலில் இருந்து சீனி நீக்கப்பட்டுள்ளது எனவும், இதனாலேயே அதன் விலை கட்டுப்பாடு இன்றி உயர்வடைந்து செல்கின்றது எனவும் எதிர்க்கட்சிகள் தெரிவிக்கின்றன.

இலங்கை மக்கள் வருடாந்தம் சுமார் 500 மெட்ரிக் தொன் சீனியைப் பயன்பாட்டுக்கு எடுத்துக்கொள்கின்றனர். அதனை ஈடுசெய்ய 100 மெட்ரிக் தொன் சீனி நாட்டில் உற்பத்தி செய்யப்படுவதுடன், எஞ்சிய தொகை வெளிநாடுகளில் இருந்தே இறக்குமதி செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ)

# வவுனியாவில் ஒரே நாளில் 244 பேருக்கு தொற்று உறுதி

வவுனியா, ஓக. 28

வவுனியா மாவட்டத்தில் ஒரே நாளில் 244 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில் இனங்காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியோர், வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டோர் மற்றும் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். மற்றும் அன்ரிஜென் பரிசோதனைகளின் முடிவுகள் சில நேற்று முன்தினம் இரவு வெளியாகின.

அதில் வவுனியா, வவுனியா வடக்கு, செட்டிக்குளம், வவுனியா தெற்கு ஆகிய பிரிவுகளை உள்ளடக்கியதாக மாவட்டம் முழுவதும் கொரோனாத் தொற்று பரவல் அடைந்துள்ள நிலையில் 244 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், தொற்றாளர்களை கொரோனா சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பிவைப்பதற்கும் அவர்களுடன் தொடர் புடையவர்களை தனிமைப்படுத்துவதற்கும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். (இ)

ஈழநாடு



# காபூலில் இரு தற்கொலை தாக்குதல்கள் 13 அமெ. வீரர்கள் உட்பட 108 பேர் பலி!

காபூல், ஒக. 28

ஆப்கானிஸ்தானின் தலைநகர் காபூல் விமான நிலையம் அருகே நடத்தப்பட்ட இரு குண்டு வெடிப்பு மற்றும் துப்பாக்கி சூட்டு சம்பவங்களில் 13 அமெரிக்க படையினர், 95 பொதுமக்கள் உட்பட 108 பேர் கொல்லப்பட்டனர். இதில், 150 பேர் காயமடைந்தனர்.

விமான நிலையப் பகுதியில் தாக்குதல் நடத்தப்படலாம் என்று அமெரிக்க உளவுத்துறை எச்சரித்த சில மணிநேரங்களிலேயே இந்தத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இந்தத் தாக்குதல்கள் நடத்தப்பட்ட போது சுமார் 5 ஆயிரம் பொது மக்கள் அங்கு கூடியிருந்தனர். நடத் தப்பட்டவை தற்கொலை தாக்குதல் கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

விமான நிலையத்தின் நுழைவு வாயில் அருகிலும், ஆப்கானிஸ் தானியர்களை மீட்பதற்காக பிரிட் டன் படைகள் பயன் படுத்தும் ஹோட்டல் அருகிலும் இந்தத் தாக்குதல்கள் நடத்தப்பட் டுள்ளன.

இந்தத் தாக்குதல்களுக்கு ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் கோரசன் என்ற பிரிவு பொறுப் பேற்றுள்ளது.

காபூல் விமான நிலையத்தில் தற்போது 5,800 அமெரிக்க படை யினரும் சுமார் 1000 பிரிட்டன் படையினரும் உள்ளனர். இதுவரை ஆப்கானிஸ்தானில் இருந்து ஒரு இலட்சத்து 4 ஆயிரம் பொதுமக் கள் மீட்கப்பட்டுள்ளனர். இதில் 66 ஆயிரம் பேர் அமெரிக்கா மூலமாக வும் மேலும் 37 ஆயிரம் பேர் அமெரிக்காவின் நட்பு நாடுகள் மூலமாக வெளியேற்றப்பட்டனர்.

இதேவேளை, தாக்குதல்களை அடுத்து நிறுத்தப்பட்ட விமான சேவைகள் நேற்று காலை முதல் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டன. (ஐ)





## நைஜீரியாவில் கடத்தப்பட்ட 100 மாணவர்கள் விடுதலை!

நைஜர், ஒக. 28

நைஜீரியாவில் கடந்த மே மாதம் துப்பாக்கி முனை யில் கடத்திச் செல்லப்பட்ட 100இற்கும் மேற்பட்ட மாணவர்களை கடத்தல் கும்பல் விடுதலை செய்துள்ளது.

நைஜீரியாவின் நைஜர் மாகாணத்தில் உள்ள தெகினா என்ற நகரில் இஸ்லாமிய பாடசாலைக்குள் கடந்த மே 30ஆம் திகதி நுழைந்த ஆயுததாரிகள் 136 மாணவர் களை துப்பாக்கிமுனையில் கடத்திச் சென்றனர்.

கடத்தப்பட்ட மாணவர்களை மீட்க நைஜீரிய படையினர் தீவிர முயற்சி செய்தனர். இதனிடையே, கடந்த ஜூன் மாதம் கடத்தல்காரர்களின் பிடியில் இருந்த 6 மாணவர்கள் உயிரிழந்தனர். மேலும் 15 மாண வர்கள் கடத்தல்காரர்களிடம் இருந்து தப்பியோடியி ருந்தனர்.

இந்நிலையில், 3 மாதங்களுக்கு மேலாக தங்கள் பிடியில் இருந்த 100இற்கும் மேற்பட்ட மாணவர்களை கடத்தல்காரர்கள் நேற்று முன்தினம் விடுதலை செய்தனர். எத்தனை பேர் விடுதலை செய்யப்பட்டுள் ளார்கள்? என்ற முழு விவரம் வெளியாகவில்லை.

ஆனால், கடத்தல்காரர்களின் பிடியில் தற்போது எந்த மாணவர்களும் இல்லை என இஸ்லாமிய பள்ளி தலைவர் அபூபக்கர் அல்ஹசன் தெரிவித்துள்ளார். (ஐ)

# மறக்கவோ, மன்னிக்கவோ மாட்டோம்! எமது படை உங்களை வேட்டையாடும்!!

வாஷிங்டன், ஒக. 28

காபூல் தாக்குதலை மறக்கவும் மாட்டோம், மன்னிக்கவும் மாட் டோம் என அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூல் விமான நிலையம் அருகே நடத்தப்பட்ட இரு தற்கொலை தாக்குதல்கள் மற்றும் துப்பாக்கி சூட்டில் 13 அமெரிக்க படையினர் உட்பட 108 பேர் கொல்லப்பட்ட னர். இந்தத் தாக்குதலுக்கு ஐ.எஸ் அமைப்பு பொறுப்பேற்றுள்ளது.



இந்த நிலையில், அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன்பயங்கரவாதி களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

"ஆப்கானிஸ்தானிலிருந்து அமெரிக்கர்கள் அனைவரையும் மீட்போம். எங்கள் நட்பு நாட்டின ரையும் மீட்போம். காபூல் விமான நிலைய குண்டுவெடிப்பு சம்பவத்தை நாங்கள் மறக்கவும் மாட்டோம், மன்னிக்கவும் மாட்டோம். அதற் குப் பதிலாக எங்கள் படைகளுடன் உங்களை வேட்டையாடுவோம்."

இந்தத் தாக்குதலில் தலிபான் களுக்கும் இஸ்லாமிய அரசுக்கும் தொடர்பு இருப்பதாக எந்தவித ஆதாரமுமில்லை", என்று தெரிவித் துள்ளார். (ஐ)

## மணிக்கு 1078 கி.மீ. வேகத்தில் பயணிக்கும் 'ஹைபர்லூப்'கள்

### சோதனை ஓட்டங்கள் வெற்றி




நியூயோர்க், ஒக. 28

நகரங்களை நிமிடங்களில் இணைக்கும் எதிர்கால போக்குவரத்து தொழில்நுட்பமான ஹைபர்லூப் பாட்கள் இயங்கும் விதத்தை காணொலியாக வெளியிட் டுள்ளது ரிச்சர்ட் பிரான்சனின் விர்ஜின் எம்பயர் நிறுவனம்.

இது மணிக்கு 1,078 கிமீ வேகத்தில் பயணிக்கும் தொழில்நுட்பமாகும். வெற்றிடம் போன்ற குழாய் அமைப்பில் 28 பேர் வரை அமர்ந்து பயணிக்கக் கூடிய வகையிலான பாட்கள் எந்தவித இணைப்புமின்றி முழுமையாக மேக்னடிக் லெவிடேஷன் என்கிற மின் காந்தவியல் அடிப்படையில் இயங்கக்கூடியதாகும். சுற்றுச்சூழலுக்கு மாசு ஏற்படுத்தாத வகையில் 21ஆம் நூற்றாண்டுக்கான போக்கு வரத்து தொழில்நுட்பமாக இது விளங்கும் என அந்நிறுவனம் கூறியுள்ளது.

உலகப் புகழ்பெற்ற தொழிலதிபர் ரிச்சர்ட் பிரான்ச னின் விர்ஜின் எம்பயர் நிறுவனம் பல ஆண்டுகளாகவே இதற்கான ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளது. இந்த பாட் கள் ரயில் பெட்டிகள்போல ஒன்றோடொன்று இணைக் கப்பட்டது போல் அல்லாமல் இருந்தாலும் ஒன்றை யொன்றுமுறையாகப் பின் தொடர்ந்து செல்லும் வகை யில் இயங்கக் கூடியது. தேவையின் பொருட்டு பாட்கள் இயக்கப்படும்.

எல்லாவற்றையும் இயக்கவேண்டிய அவசியம் இருக் காது. இதன்மூலம் அவை ஒவ்வொன்றும் சென்று சேர வேண்டிய இடத்துக்கு நேரடியாக சென்று சேர முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஹைபர்லூப் பாட்களின் சோதனை ஓட்டங் கள் வெற்றியடைந்தன எனவும், இனி வணிகத்துக்கான தயாரிப்புகளில் கவனம் செலுத்த உள்ளதாகவும் விர்ஜின்நிறுவனம் கூறியுள்ளது. (ஐ)

## ஆப்கானிஸ்தானிலிருந்து கனடா படை வெளியேறியது!

ஒட்டாவா, ஒக. 28

ஆப்கானிஸ்தானில் அனைத்து நடவடிக்கைகளையும் முடித்துக்கொண்டு கனடியப் படைகள் முழுமையாக வெளியேறின. இந்நிலையில் சில கனடியர்கள் மற்றும் கனடாவின் ஆப்கானிய கூட்டாளிகள் இன்னமும் காபூலில் சிக்கி தவிக்கின்றனர் என இராணுவ அதிகாரி கள் நேற்று முன்தினம் வியாழக்கிழமை தெரிவித்தனர்.

தலிபான்கள் காபூலைக் கைப்பற்றிய பின்னர் அங்கி ருந்து 3,700 கனடியப் படையினர் அவசரமாக நாடு திரும்பினர். தொடர்ந்து குறைந்தளவான படையினரே மீட்பு பணிகளில் அமெரிக்கா உள்ளிட்ட படையின ரோடு இணைந்து ஈடுபட்டிருந்தனர்.

இந்நிலையில் காபூலில் நேற்று முன்தினம் நடத்தப் பட்ட குண்டுவெடிப்புக்கு சில மணி நேரங்களுக்கு முன் னர் கனடியப் படைகள் ஆப்கானில் தங்கள் நடவடிக் கைளை நிறுத்திக்கொண்டு முழுமையாக வெளியேறின.

இதேவேளை, தற்போது ஆப்கானிஸ்தானில் எத்தனை கனடியர்கள் இருக்கிறார்கள்? என்பது இன்னும் தெளி வாகத் தெரியவில்லை. (ஐ)





## 200 கோடி பேருக்கு சீனாவில் தடுப்பூசி

பீஜிங், ஒக. 28

சீனாவில் இதுவரை 200 கோடி கொரோனா தடுப் பூசிகள் செலுத்தப்பட்டன என்று அந்த நாட்டின் அர சாங்கம் தெரிவித்துள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை நிலவரப்படி மொத்தம் உள்ள 140 கோடி மக்கள் தொகையில் 88.9 கோடி பேருக்கு இரண்டு டோஸ்கள் ஏற்றப்பட்டன. நடப் பாண்டு இறுதிக்குள் சீன மக்கள் அனைவரும் நோய் எதிர்ப்பாற்றலை அடைந்து விடுவர் என எதிர்பார்க்கப் படுகிறது.

கொரோனாவிற்கு எதிரான சீன தடுப்பூசி 70 சதவீதம் செயல்திறன் கொண்டுள்ளது என்று அந்த நாடு தெரிவித் துள்ளது. (ஐ)

# ரூட் அபார சதம்: இங்கிலாந்து 432



லீட்ஸ், ஓக. 28

ஜோ ரூட்டின் அபார சதத்தின் உதவியால் இங்கிலாந்து அணி முதல் இனிங்ஸில் 432 ஓட்டங்களைக் குவித்துள்ளது.

இங்கிலாந்து சென்றுள்ள இந்திய அணி அங்கு 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகின்றது. இதில், மூன்றாவது போட்டி கடந்த புதன்கிழமை தொடங்கியது.

நாணயச் சுழற்சியில் வென்று முதலில் ஆடிய இந்திய அணி 78 ஓட்டங்களுக்கு சுருண்டது. முதல் நாள் விக்கெட் இழப்பின்றி 120 ஓட்டங்களை இங்கிலாந்து அணி எடுத்தது.

நேற்று முன்தினம் மதியபோசன இடைவேளைக்காக ஆட்டம் இடைநிறுத்தப்பட்டபோது 182 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களை இங்கிலாந்து இழந்திருந்தது. இதனால், 104 ஓட்டங்களால் அந்த அணி முன்னிலை பெற்றிருந்தது.

இதன் பின்னர் தொடர்ந்து துடுப்பெடுத்தாடியது இங்கிலாந்து அணி. டேவிட் மலன், ஜோ ரூட் இணை அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். நிலைத்து ஆடிய இந்த இணையை ஆட்டமிழக்க செய்ய முடியாமல் இந்திய பந்துவீச்சாளர்கள் திணறினர்.

நீண்ட நேர முயற்சியின் பின்னர், 128 பந்துகளை எதிர்கொண்டு 11 பௌண்ட்ரிகளுடன் 70 ஓட்டங்களை எடுத்திருந்த மலனை சிராஜ் வீழ்த்தினார். இதன் பின்னர் வந்த வீரர்கள் சொற்ப ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தாலும், ரூட் மறுபுறத்தில் நிலைத்து ஆடினார். அவர் 124 பந்துகளில் சதம் அடித்தார். இது அவரின் 23ஆவது சதமாகும்.

நேற்று முன்தினம் இரண்டாம் நாள் ஆட்டம் முடிவடையும்போது இங்கிலாந்து 8 விக்கெட்கள் இழப்புக்கு 423 ஓட்டங்களை எடுத்திருந்தது.

மூன்றாம் நாள் ஆட்டம் நேற்று ஆரம்பமான சிறிது நேரத்தில் கிரைக் ஓவர்ரன் 32, ரொபின்சன் 0 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். இதனால், இங்கிலாந்து அணி 132.2 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 432 ஓட்டங்களை எடுத்தது.

இந்தியாவின் பந்துவீச்சில் முஹமட் சமி 4 விக்கெட்களையும், பும்ரா, சிராஜ், ஜடேஜா ஆகியோர் தலா 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

354 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில், நேற்று இரண்டாவது இனிங்ஸை ஆரம்பித்த இந்திய அணிக்கு ரோஹித் சர்மா, கே. எல். ராகுல் இணை தொடக்கம் கொடுத்தது. இந்த இணை நிதானமான ஆட்டத்தை வெளிப்படுத்தியது.

நேற்று மதிய போசனத்திற்காக ஆட்டம் நிறுத்தப்பட்டபோது, 19 ஓவர்கள் நிறைவில் இந்திய அணி 34 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டை இழந்திருந்தது. கே. எல். ராகுல் 8 ஓட்டங்களை எடுத்திருந்த நிலையில் ஓவர்ரனின் பந்தில் பெயர்ஸ்ரோவிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார். ரோஹித் சர்மா 25 ஓட்டங்களை எடுத்திருந்தார். (ஐ)



## இந்தியாவுக்கு எதிராக ஜோ ரூட் அதிக சதங்கள்

லீட்ஸ், ஓக. 28

இந்தியாவுக்கு எதிராக தற்போது நடக்கும் டெஸ்ட் தொடரில் தொடர்ச்சியாக மூன்றாவது சதத்தை அடித்துள்ளார் இங்கிலாந்து அணியின் தலைவர் ஜோ ரூட்.

இந்தியாவுக்கு எதிராக ஸ்ரீவ் ஸ்மித், ஹரி சோபர்ஸ், விவியன் ரிச்சர்ட்ஸ், றிக்கி பொண்டிங் ஆகிய வீரர்கள் அதிகபட்சமாக தலா எட்டு டெஸ்ட் சதங்கள் அடித்துள்ளார்கள். 3ஆவது டெஸ்டின் முதல் இனிங்ஸில் இந்தியாவுக்கு எதிராக மீண்டும் சதமடித்த ஜோ ரூட்டும் இந்தப் பட்டியலில் இணைந்துள்ளார்.

ஜோ ரூட், இந்தத் தொடரில் மிகச்சிறப்பாக விளையாடி வருகிறார். முதல் டெஸ்டில் 64, 109 ஓட்டங்கள் எடுத்தவர், லோர்ட்ஸ் டெஸ்டில் 180*, 33 ஓட்டங்களை எடுத்தார். இப்போது மற்றொரு சதம் அடித்துள்ளார். இதன்மூலம், 23 டெஸ்ட் சதங்கள் அடித்துள்ள ஜோ ரூட், 8 சதங்களை இந்தியாவுக்கு எதிராக எடுத்துள்ளார்.

2021ஆம் ஆண்டில் மட்டும் ஆறு சதங்களை எடுத்துள்ளார். இதனால் இந்தியாவுக்கு எதிராக அதிக டெஸ்ட் சதங்களை அடித்தவர்களின் பட்டியலில் அவரும் இணைந்துள்ளார். (ஐ)

## ஐ.பி.எல்.தொடரில் விளையாட ஹசரங்க, சமீரவுக்கு அனுமதி!

கொழும்பு, ஓக . 28

ஐக்கிய அரபு இராச்சியத்தில் தொடரவுள்ள எஞ்சிய ஐ.பி.எல். இருபதுக்கு 20 கிரிக்கெட் போட்டிகளில் விளையாடுவதற்கு இலங்கை வீரர்களான வனிந்து ஹசரங்க, துஷ்மந்த சமீர ஆகியோருக்கு இலங்கை கிரிக்கெட் சபை அனுமதி வழங்கியுள்ளது.



இவர்கள் இருவரும் விராட் கோலி தலைமையிலான பெங்களூர் றோயல் செலஞ்சர்ஸ் அணியுடன் ஒப்பந்தம் செய்துகொண்டனர்.

எனினும், ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டிகளில் விளையாடுவதற்கு வனிந்து ஹசரங்கவும் துஷ்மந்த சமீரவும் ஓரிரு தினங்களுக்கு முன்னரே எழுத்து மூலம் அனுமதி கோரினர் எனவும் அதற்கான ஆட்சேபனையற்ற சான்றிதழ் வழங்கப்பட்டதாகவும், கிரிக்கெட் சபையின் செயலாளர் மொஹான் டி சில்வா தெரிவித்தார்.

தென்னாபிரிக்கா வுக்கு எதிரான ஒரு நாள், இருபது -20 தொடர்களை நிறைவடைந்த பின்னர் இருவரும் ஐக்கிய அரபு இராச்சியத்துக்கு பயணிப்பர்.



இந்தியாவில் நடந்த ஐ.பி.எல். தொடர் தொற்றால் நிறுத்தப்பட்டது. இது இப்போது இரண்டாம் பாகமாக ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடத்தப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

## பரிசு பணத்தை மருத்துவமனைக்கு அன்பளிப்பாக வழங்கினார் தசூன்!




கொழும்பு, ஓக. 28

இலங்கை கிரிக்கெட் அணித் தலைவரான தசூன் சானக தனக்கு கிடைத்த தொடர் நாயகனுக்கான பரிசு தொகையான 2 இலட்சம் ரூபாயை களுபோவில போதனா மருத்துவமனைக்கு நன்கொடை யாக வழங்கினார்.

இலங்கை கிரிக்கெட் சபை இன்விடேசனல் இருபது - 20 தொடர் அண்மையில் நடந்து முடிவடைந்தது.

இந்தப் போட்டியில் தசூன் சானக தலைமையிலான கிரேஸ் அணி சம்பியன் வென்றது. தொடர் நாயகனான தசூன் சானகவுக்கு வெற்றிக்கிண்ணமும் 2 இலட்சம் ரூபாய் பணப் பரிசும் வழங்கப்பட் டது.

இந்த நிலையில், கொரோனா தொற்றால் கடுமையாக பாதிக்கப் பட்ட களுபோவில போதனா மருத்துவமனைக்கு தனது பரிசு தொகையை நன்கொடையாக தசூன் சானக வழங்கினார்.

இந்தத் தொடரில், அவர் 258 ஓட்டங்களை எடுத்ததுடன், 3 விக்கெட்களையும் கைப்பற்றியிருந்தார். (ஐ)

## இதய சத்திர சிகிச்சையால் கெய்ன்ஸுக்கு பக்கவாதம்!



சிட்னி, ஓக. 28

நியூஸிலாந்து அணியின் முன்னாள் சகலதுறை வீரர் கிறிஸ் கெய்ன்ஸின் உயிரைக் காக்க அவுஸ்திரேலியாவில் நடத்தப்பட்ட சத்திர சிகிச்சையால் அவருக்கு பக்கவாதம் ஏற்பட்டுள்ளது.

51 வயதான கிறிஸ் கெய்ன்ஸுக்கு உடல்நலக்குறைவால் ஏராளமான சத்திர சிகிச்சைகள் இதற்கு முன் செய்யப்பட்டன. அவுஸ்திரேலியாவின் கன்பெராவில் வசித்து வரும் கெய்ன்ஸுக்கு இந்த மாதத் தொடக்கத்தில் இதயத்தில் ரத்த நாளத்தில் ஏற்பட்ட கோளாறால் திடீரென மயங்கி விழுந்தார்.

கன்பெரா நகரில் உள்ள மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட கெய்ன்ஸுக்கு ஒட்சிசன் உதவியோடு தீவிரமான சிகிச்சை தொடர்ந்து அளித்தும் எந்தவிதமான முன்னேற்றமும் இல்லை. இதையடுத்து, சிட்னியில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்ட கெய்ன்ஸுக்கு உயிர்காக்கும் சத்திர சிகிச்சை இதயத்தில் மேற்கொள்ளப்பட்டது.

இந்த சத்திர சிகிச்சை முடிந்த நிலையில் திடீரென கெய்னுக்கு ஸ்ரோர்க் ஏற்பட்டு, அவரின் இடது கால் பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டது.

கிறிஸ் கெய்ன்ஸ் நியூஸிலாந்து அணிக்காக 1989 - 2006 வரை 62 டெஸ்ட், 215 ஒருநாள் போட்டிகளில் அவர் விளையாடினார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# உயர்தரம், புலமைப்பரிசில் பரீட்சைகள்: விண்ணப்பிக்கும் கால எல்லை நீடிப்பு!

கொழும்பு, ஓக. 28

2021 ஆண்டுக்கான ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை மற்றும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைகளுக்காக விண்ணப்பிக்கும் கால எல்லை நீடிக்கப்பட்டுள்ளது.

இதன்படி பரீட்சைகளுக்குத் தோற்றவுள்ளோர் எதிர்வரும் செப்டெம்பர் 15 ஆம் திகதி வரையில் விண்ணப்பிக்க முடியும் என்று பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.



பாடசாலைகள் மூடப்பட்டுள்ளமை மற்றும் நாட்டில் அமுல்படுத்தப்பட்டுள்ள ஊரடங்குச் சட்டத்தைக் கருத்தில் கொண்டு விண்ணப்பக் கால எல்லையை நீடிக்கத் தீர்மானித்துள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் பி.சனத் பூஜித தெரிவித்துள்ளார்.

புலமைப்பரிசில் பரீட்சையை எதிர்வரும் நவம்பர் 14 ஆம் திகதி நடத்துவதற்கும், உயர்தரப் பரீட்சையை எதிர் வரும் நவம்பர் 15ஆம் திகதி முதல் டிசம்பர் 10ஆம் திகதி வரையில் நடத்துவதற்கும் கல்வி அமைச்சால் கடந்த ஜூலை மாதத்தில் தீர்மானிக்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ)

# மேலும் 20 இலட்சம் தடுப்பூசிகள் சீனாவிடமிருந்து இலங்கைக்கு!

கொழும்பு, ஓக. 29

சீனாவிலிருந்து மேலும் 20 இலட்சம் சினோபார்ம் தடுப்பூசிகள் இன்று இலங்கைக்குக் கொண்டுவரப்படவுள்ளன என்று இலங்கையிலுள்ள சீனத் தூதரகம் அறிவித்துள்ளது.

இந்தத் தடுப்பூசிகள் கிடைக்கப்பெறுமானால், இதுவரை சீனாவினால் இலங்கைக்கு வழங்கப்பட்ட சினோபார்ம் தடுப்பூசிகளின் மொத்த எண்ணிக்கை ஒரு கோடி 80 இலட்சமாக அதிகரிக்கும்.




அத்துடன், இம்மாதத்தில் சீனாவினால் இலங்கைக்கு வழங்கப்பட்ட சினோபார்ம் தடுப்பூசிகளின் மொத்த எண்ணிக்கை 70 இலட்சமாகவும் மாறும் என்றும் சீனத் தூதரகம் மேலும் தெரிவித்துள்ளது. (இ)



# கொரோனா ஒழிப்பு பணிக்கு இலங்கைக்கு முழு ஒத்துழைப்பு

## சபாநாயகரிடம் சீன தூதுவர் உறுதி

கொழும்பு, ஓக. 28

இலங்கைக்கான சீனத் தூதுவர் ஷீ சென்ஹொங் மரியாதையின் நிமிர்த்தம் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவை சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

தற்போதைய கொரோனா சூழலைக் கட்டுப்படுத்துவதற்கு இரு நாடுகளும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டுவரும் நேரத்தில், கொரோனாவைக் கட்டுப்படுத்த இலங்கை அரசுக்கு முழுமையான ஒத்துழைப்பை சீன அரசு தொடர்ந்தும் வழங்கும் என்று சபாநாயகரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நடைபெற்ற சந்திப்பில் சீனத் தூதுவர் தெரிவித்தார்.

அத்துடன், இரு நாடுகளுக்கும் இடையில் பொருளாதார, நிதி ஒத்துழைப்பு மற்றும் பாராளுமன்ற நட்புறவை பலப்படுத்துவது குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

இலங்கையின் நீண்டகால நட்பு நாடு என்ற ரீதியில் சீன அரசு தொடர்ச்சியாக வழங்கி வரும் ஒத்துழைப்புகளுக்கு சபாநாயகர் தனது நன்றியைத் தெரிவித்தார். (இ)

# நாட்டை தொடர்ச்சியாக முடக்கிவைத்து ஆட்சியை கவிழ்ப்பதே எதிரணியின் இலக்கு

## அமைச்சர் ரோஹித அபேகுணவர்த்தன குற்றச்சாட்டு




கொழும்பு, ஓக.28

**‘கொரோனா வைரஸ் என்ற சர்வதேச தொற்று நெருக்கடி நிலைமைக்கு மத்தியிலும் நாட்டில் ஸ்திரமற்ற தன்மையை ஏற்படுத்தி, ஆட்சியைக் கவிழ்ப்பதை இலக்காகக்கொண்டே எதிர்க்கட்சிகள் செயல்படுகின்றன. இதற்காகவே நாட்டைத் தொடர்ந்து மேலும் இரண்டு வாரங்களுக்கு முடக்குமாறு எதிரணியினர் வலியுறுத்தி வருகின்றனர்.’**

- இவ்வாறு அமைச்சர் ரோஹித அபேகுணவர்த்தன குற்றஞ்சாட்டினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

சுகாதார நடைமுறைகளை முறையாகப் பின்பற்றி கொரோனாவுக்கு மத்தியிலும் வாழ நேரும் நிலைமையே உருவாகும். எனவே, வைரஸ் தொற்றை ஒழிக்கும் செயலை முன்னெடுக்கும் அதேவேளை பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான திட்டத்தையும் ஆரம்பிக்க வேண்டும். இதன்படி சுகாதார நடைமுறைகளுக்க மைய சுற்றுலாத்துறையை செயல்படுத்த வேண்டும். கைத் தொழில் துறைகள் மற்றும் தொழிற்சாலைகள் செல்பட வேண்டும்.

நாடு முடக்கப்பட்டிருந்தாலும் அரச ஊழியர்களின் சம்பளம் துளியளவும் குறைக்கப்படவில்லை. நெருக்கடி நிலைமையிலும் முழு சம்பளம் வழங்கப்பட்டது. ஆனால், லொக்டவுணால் நாளாந்த வருமானத்தை நம்பி வாழ்பவர்களுக்குதான் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. எனவே, அவர்கள் தொடர்பிலும் சிந்தித்து நாம் விழிப்பாக செயல்பட வேண்டும்.

நாட்டை முடக்குமாறு எதிர்க்கட்சிகள் வலியுறுத்தின. நாடும் முடக்கப்பட்டுள்ளது. ஆனால், இன்று என்ன சொல்கின்றனர், பகுதியளவே நாடு மூடப்பட்டுள்ளது, எனவே, முழுமையாக மேலும் இரண்டு வாரங்கள் முடக்கப்பட வேண்டும் என வலியுறுத்துகின்றனர். தொழிற்சாலைகளை மூடுமாறு அழுத்தம் கொடுக்கின்றனர்.

தொழிற்சாலைகள் இயங்காது, ஏற்றுமதி வீழ்ச்சியடைந்தால் இந்நாட்டுக்கான அந்திய செலாவணி கிடைக்காது. நாட்டுக்கு வருமானம் இல்லாமல் போனால் டொலர் இருக்காது. அவ்வாறானதொரு நிலைமை ஏற்பட்டால் எரிபொருள் மற்றும் மருந்து வகைகளை வாங்க முடியாது - என்றார். (இ)

ஈஸ்டர் தாக்குதல் விசாரணை:

# பொலிஸ்மா அதிபரின் அறிவிப்பு கண்காட்சியாகக்கூட இருக்கலாம்

## இப்படி சாடுகின்றது ஐக்கிய மக்கள் சக்தி

கொழும்பு, ஓக. 28

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் விசாரணை தொடர்பில் பொலிஸ்மா அதிபர் விடுத்துள்ள அறிவிப்பானது ஊடகத்துக்கான கண்காட்சியாகக்கூட இருக்கலாம் என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி சாடியுள்ளது.

‘உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலுடன் தொடர்புடைய 311 பேர் தடுப்புக் காவலில் வைக்கட்டுள்ளனர். ஒரு இலட்சம் தொலைபேசி உரையாடல்கள் பகுப்பாய்வுக் குட்படுத்தப்பட்டுள்ளன. 36 கோடி 50 இலட்சம் ரூபாய் பணம் மற்றும் சொத்துக்கள் இதுவரை பறிமுதல் செய்யப்பட்டுள்ளன’ என்று பொலிஸ்மா அதிபர் சி.டி. விக்கிரமரத்ன தெரிவித்திருந்தார். இந்தத் தாக்குதல் தொடர்பான விசாரணைகள் குறித்து பொலிஸ்மா அதிபர் விசேட காணொலி அறிவிப்பிலேயே மேற்கண்டவாறு கூறியிருந்தார்.

இது தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசீம் கூறியதாவது:-

‘உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் சுயாதீன விசாரணை நடத்தப்பட வேண்டும், தாக்குதலின் பின்புலம் மற்றும் பிரதான சூத்திரதாரிகள் கண்டறியப்பட வேண்டும் என்று பாராளுமன்றத்துக்குள்ளும், வெளியிலும் பிரதான எதிர்க்கட்சி என்ற அடிப்படையில் நாம் குரல் எழுத்தோம். பேராயர் உள்ளிட்ட தரப்பினரும் இதனை வலியுறுத்தினர்.

தாக்குதல் நடைபெற்று ஒன்றரை வருடங்களுக்குப் பின்னரே பொலிஸ்மா அதிபர் ஒருவர் வெளியில் வந்து அது தொடர்பில் கருத்து வெளியிடுகின்றார். கறுப்புக்கொடிப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு கடும் எதிர்ப்புகள் வெளிக்கியம்பியுள்ள பின்புலத்திலேயே குறித்த அறிவிப்பும் பொலிஸ்மா அதிபரால் வெளியிடப்பட்டுள்ளது.

எனவே, இது கண்காட்சியாகக்கூட இருக்கலாம். ஜனாதிபதி ஆணைக்குழு அமைக்கப்பட்டு மூன்று மாதங்களுக்குள் குற்றவாளிகளுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதியின் சௌபாக்கிய வேலைத்திட்டத்தில் உறுதி வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அரசு செயல்படாதது ஏன்?” என்றும் அவர் கேள்வி எழுப்பினார். (இ)




# துரித அன்ரிஜென் பரிசோதனைகளை வீடுகளிலேயே மேற்கொள்ள திட்டம்

கொழும்பு, ஓக. 28

வீடுகளிலேயே துரித அன்ரிஜென் பரிசோதனைகளை மேற்கொள்ளும் திட்டத்தை அறிமுகப்படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலின்போது, சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

கொரோனாத் தொற்றால் உயிரிழப்போரில் 86 வீதமானோர் பல்வேறு நோய்களுக்குள்ளானவர்கள் எனவும், 12 வீதமானோர் ஒரு தடுப்பூசியை மாத்திரம் ஏற்றிக் கொண்டவர்கள் எனவும் இதன்போது அவர் கூறியுள்ளார்.

இரண்டு தடுப்பூசிகளையும் பெற்றுக்கொண்டவர்களில் 2.5 வீதமானவர்களே கொரோனாத் தொற்றால் உயிரிழந்தனர் எனவும், அவர்களும் ஏனைய நோய்களால் பீடிக்கப்பட்டவர்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

## செப். 6 அதிகாலை...

தொடர்பான விசேட கூட்டத்தின் போதே, இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இதன்போது, தடுப்பூசி ஏற்றல் வேலைத்திட்டத்தின் முன்னேற்றம் தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டதோடு, இதுவரையில் தடுப்பூசி ஏற்றப்படாத 30 வயதுக்கு மேற்பட்ட நபர்கள் மற்றும் பிரதேசங்கள் காணப்படுமாயின், அவர்களுக்குத் தேவையான தடுப்பூசிகளைக் கேட்டுப் பெற்றுக் கொள்ள, சுகாதார மருத்துவ அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்துமாறு, ஜனாதிபதி ஆலோசனை வழங்கினார்.

ஏதாவது காரணத்தால் தடுப்பூசியின் முதலாம் டோஸைப் பெற்றுக்கொள்ள முடியாத நபர்கள் காணப்படுவார்களாயின், இரண்டாவது டோஸ் தடுப்பூசி ஏற்றப்படும் நிலையங்களில் வைத்தே அவ்வாறானவர்களுக்கும் முதலாவது டோஸ் தடுப்பூசியை வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும், இதன்போது எடுத்துரைக்கப்பட்டது. தடுப்பூசி ஏற்றிக் கொள்வது தொடர்பில் பொதுமக்களை ஊக்கப்படுத்தும் வேலைத்திட்டங்களை, பிரதேச ரீதியில் அரசியல்வாதிகள் முன்னெடுக்க வேண்டுமென்று, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இதன்போது எடுத்துரைத்தார்.

இந்த வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்காக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் இதுவரை பரிந்துரைகளை முன்வைத்த வைத்தியர்கள் மற்றும் சுகாதாரத்துறை முக்கியஸ்தர்கள் ஆகியோர், எதிர்வரும் காலங்களில் முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பிலும் அவதானம் செலுத்த வேண்டுமென்று, ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

60 வயதுக்கு மேற்பட்ட மற்றும் தொற்றா நோய்களால் பீடிக்கப்பட்டுள்ள நபர்களுக்கு வைரஸ் தொற்று ஏற்படுமாயின், உடனடியாக அவர்களை வைத்தியசாலைகளில் அனுமதிக்க வேண்டும். அவ்வாறு அனுமதிக்கப்படும் நபர்கள், உரிய மருத்துவ சிகிச்சைகளின் பின்னர் வெகு விரைவில் குணமடைந்து வீடுகளுக்குத் திரும்புவதாக, ஜனாதிபதியிடம் இதன்போது தெரிவிக்கப்பட்டது.

கோவிட் நோய்க்கு ஆளாகாத நிலையில் அல்லது வீட்டில் எந்தவொரு நபரும் தனிமைப்படுத்தப்படாத நிலையில் நபரொருவர் உயிரிழப்பாராயின், அவருக்கான இறுதிக் கிரியைகளை 24 மணித்தியாலங்களுக்குள் மேற்கொள்வது தொடர்பில் ஏற்கெனவே எடுக்கப்பட்டிருந்த தீர்மானத்தைத் தொடர்ந்துச் செயற்படுத்துவது தொடர்பிலும், இந்தக் கூட்டத்தின் போது விசேட அவதானம் செலுத்தப்பட்டது.

வீடுகளில் சிகிச்சைப் பெற்றுவரும் கோவிட் நோயாளிகளை, தொடர்ந்து மருத்துவக் கண்காணிப்புக்கு உட்படுத்தப்படும் வேலைத்திட்டம் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என, பாதுகாப்புப் பணிக் குழாம் பிரதானியும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் ஷவேந்திர சில்வா தெரிவித்தார்.

தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் நடைமுறையில் உள்ள காலப்பகுதியில், பொதுமக்களின் நாளாந்தத் தேவைகளை நிறைவேற்றுவதற்காக முன்னெடுக்கப்பட்டுள்ள வேலைத்திட்டங்கள் தொடர்பிலும் இதன்போது ஆராயப்பட்டது. அன்றாடம் வருமானம் பெறும் தொழில்களில் ஈடுபடுவோர் மற்றும் வருமானம் குறைந்த மக்கள் தொடர்பில் விசேட அவதானம் செலுத்துவதன் அவசியம் தொடர்பில், ஜனாதிபதி இதன்போது எடுத்துரைத்துரைத்தார்.

தேசிய பொருளாதாரத்தை முகாமைத்துவம் செய்துகொண்டே, வைரஸ் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்துவதன் அவசியத்தை, அமைச்சர் பஸில் ராஜபக்ஷ எடுத்துரைத்தார். பொதுமக்களுக்குத் தேவையான அத்தியாவசிய உணவுப் பொருட்களை, நிவாரண விலைக்குப் பெற்றுக்கொடுக்க, சதொச ஊடாக வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளமை தொடர்பில், அமைச்சர் பந்துல குணவர்தன தெளிவுபடுத்தினார்.

நாடு முழுவதிலுமுள்ள மக்களுக்கு, நோயெதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கக் கூடிய தேசிய ஔடதங்களைப் பெற்றுக் கொடுக்க சுதேச மருத்துவ அமைச்சு முன்னெடுத்துள்ள வேலைத்திட்டங்கள் தொடர்பில், இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயகொடி விவரித்தார். இந்தத் தொற்றுப் பரவல் நிலைமை மற்றும் அதிலிருந்து பாதுகாப்புப் பெறவேண்டிய முறைமைகள் தொடர்பில், ஊடகங்கள் வாயிலாகப் பொதுமக்களுக்கு அடிக்கடி தெளிவுபடுத்தல்களை மேற்கொள்ள, அரச மற்றும் தனியார் ஊடகங்கள் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருவதாகத் தெரிவித்த அமைச்சர் டலஸ் அழகப்பெரும, அதற்கான ஒருங்கிணைப்பு வேலைத்திட்டங்களை, ஊடகத்துறை அமைச்சின் ஊடாக முன்னெடுத்து வருவதாகவும் குறிப்பிட்டார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, அமைச்சர்களான பஸில் ராஜபக்ஷ, கெஹெலிய ரம்புக்வெல்ல, பந்துல குணவர்தன, டலஸ் அழகப்பெரும, இராஜாங்க அமைச்சர்களான சுதர்ஷனி பெர்ணான்டோபுள்ளே, சிசிர ஜயகொடி, ஷன்ன ஜயசுமன, ஜனாதிபதியின் தலைமையில் ஆலோசகர் லலித் வீரதுங்க, சுகாதார அமைச்சின் செயலாளர் மேஜர் ஜெனரல் விசேட வைத்திய நிபுணர் சஞ்ஜீவ முனசிங்க, பாதுகாப்புப் பணிக் குழாம் பிரதானியும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் ஷவேந்திர சில்வா, சுகாதாரச் சேவைகள் பணிப்பாளர் நாயகம் டொக்டர் அசேல குணவர்தன உள்ளிட்ட அதிகாரிகள், கோவிட் ஒழிப்புச் செயலணியின் உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

## 1 கிலோ சீனி...

சேன இதனைத் தெரிவித்தார்.

தற்போதைய ஆட்சி இறக்குமதி வரியை 25 ரூபாவினால் குறைத்த பின்னர் அரசுடன் தொடர்புடைய வணிகர்கள் ஏற்கனவே போதுமான அளவு சீனியை இறக்குமதி செய்துள்ளனர். தற்போது வணிகர்களின் பெரும்புள்ளிகள் அரசைக் கட்டுப்படுத்துவதால் சீனி மட்டுமல்லாமல் பல பொருள்களின் விலைகள் கடுமையாக அதிகரித்துள்ளனர் என்று அவர் சுட்டிக்காட்டினார்.

"கொரோனா வைரஸ் நெருக்கடியைக் கையாள அரசு ஒரு புதிய திட்டத்தை உருவாக்க வேண்டும். இந்த முயற்சிக்கு எதிர்க்கட்சிகளும் அரசுக்கு முழு ஆதரவை அளிக்கும்.

குடிமக்கள் தங்கள் உயிர்களைப் பாதுகாக்க மட்டுமே அரசைக் கேட்கிறார்கள். குடிமக்களின் உயிர்களைப் பாதுகாப்பது அரசின் கடமை.

தற்போதைய நிர்வாகம் தோல்வி அடைந்துவிட்டது, ஆனால் நாட்டை தோல்வியடைய அனுமதிக்க முடியாது. அரசு தனது தோல்வியுற்ற கொள்கைகளை ஒதுக்கி வைத்துவிட்டு வல்லுநர்களின் உள்ளீடுகளுடன் ஒரு திட்டத்தை உருவாக்க வேண்டும்" என்றும் பாராளுமன்ற உறுப்பினர் துஷார இந்துனில் அமரசேன தெரிவித்தார்.

## யாழ். மாவட்டத்தில்...

கொண்ட அன்டிஜன் பரிசோதனைகளின்போது 364 பேர் தொற்றுடன் இனங்காணப்பட்டுள்ளனர். அதே வேளை, பி.சி.ஆர். பரிசோதனைகளின் போது 50 பேர் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

நேற்று தொற்றுடன் அடையாளம் காணப்பட்டவர்களில் அதிகபட்சமாக சாவகச்சேரியில் 124 பேரும், கரவெட்டியில் 102 பேரும் அடங்குகின்றனர். அதேவேளை, பருத்தித்துறையில் 56 பேர் தொற்றுடன் இனங்காணப்பட்டுள்ளனர். (இ)

## 4,561 பேருக்கு...

ணிக்கை 4 ஆயிரத்து 561 ஆக அதிகரித்துள்ளது.

இலங்கையில் இதுவரையில் 416, 931 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

## ஆப்கனியர்களை...

உண்மையில் சந்தேகப்பட்ட தேவையில்லை. இதுதான் உண்மை காரணம். இலங்கையில் இன்று தேசிய நெருக்கடி ஏற்பட்டு வருகிறது. ஆகவே பேச வேண்டிய தேவை அனைத்து தரப்புக்கும் ஏற்படுகிறது."

இவ்வாறு கூறியுள்ளார் தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன். இது தொடர்பில் மனோ எம்.பி. மேலும் கூறியுள்ளதாவது;

"இந்தப் பேச்சுக்கு அனுசரணை வழங்குகின்ற அமெரிக்க அரசாங்கம் வழமை போல் தமிழர்களை கைவிடக்கூடாது. சமீபத்தில், ஆப்கன் நாடு மக்களை அம்போ என அமெரிக்க அரசு கை விட்டது என அமெரிக்க மக்களே கூறுகிறார்கள். தங்கள் காரியம் ஆனாலோ, ஆகாமலோ, திடீரென அமெரிக்கர்கள் தம்மை கைவிட்டு விடுவார்களோ என்ற அச்சம் இப்போது, அமெரிக்க நண்பர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது. ஜோ பைடன் நிர்வாகத்தில் இலங்கை இனப்பிரச்சினை முன்னுரிமை பெற்ற ஒரு பிரச்னையாக இருக்க வேண்டும். இதை தூதுவர் அலைனா டெப்ளிட்ஸ் அறிய வேண்டும்

தமிழ் தேசிய கூட்டமைப்பு மட்டுமல்ல, ஏனைய தமிழ் கட்சிகளுடனும் இலங்கை அரசு பேச வேண்டும். அனைத்து தமிழ் கட்சிகளும் இத்தகைய ஒரு அரங்கத்தை ஏற்படுத்த வேண்டும். அதற்கு கூட்டமைப்பு ஆவன செய்ய வேண்டும். அதேபோல இலங்கை இனப்பிரச்சினை, வட கிழக்கை மட்டும் சார்ந்தது அல்ல. இனப்பிரச்சினையின் தாக்கங்கள மலையகம் உட்பட தென்னிலங்கை மாவட்டங்களிலும் உணரப்படுகின்றன.

தனிநாட்டு கோரிக்கை, வட கிழக்கை மட்டும் சார்ந்தது. இப்போது அப்படியல்ல. ஆகவே முழு நாட்டையும் நாம் கவனத்தில் எடுக்க வேண்டும். அதே போல் தமிழ் பேசும் முஸ்லிம் மக்களும் உள்வாங்கப்பட வேண்டும். ஆனால், தமிழ் பேசும் மக்கள் மத்தியில் பெரிய கட்சி என்ற அடிப்படையில், இன்று தமிழ் தேசிய கூட்டமைப்பு பேசுவது தான் சால பொருத்தமானது. பேச்சுகள் நடக்க முன்னமேயே, "பேச வேண்டாம், பேச வேண்டாம்" என்ற குரலும் வடக்கிலேயே கேட்கிறது.

"பேசவே வேண்டாம்" என கூறும் தரப்புகள், கூட்டமைப்பை விட்டு விட்டு, இந்த பேச்சுகளின் பின்புலத்து தரப்பான அமெரிக்காவை நோக்கி தங்கள் கேள்விகளை திருப்ப வேண்டும். தமிழ் அரசியல் கைதிகள், ஆக்கிரமிப்பு நிலங்கள் மீட்பு, 13ம் திருத்தமும், மாகாணசபை தேர்தலும், 16ம் திருத்தமும், மொழியுரிமைகளும், என்பவை ஏற்கனவே இன்றுள்ள சட்டங்களின் அடிப்படையில் செய்யக்கூடிய "குறைந்தபட்ச" விஷயங்கள். இவற்றை செய்ய அரசாங்கத்துக்கு உரிய அழுத்தங்களை இலங்கைக்கான அமெரிக்க, இந்திய தூதுவர்கள் கொடுக்க வேண்டும்.

ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்காவின் "சடுதியான வாபஸ்" நிறைய பேரை யோசிக்க வைக்கிறது. தங்கள் காரியம் ஆனாலோ, ஆகாமலோ, திடீரென அமெரிக்கர்கள் கைவிட்டு விடுவார்கள் என்று அமெரிக்க மக்களே இன்று பேசுகிறார்கள். ஐநா மனித உரிமை தொடர்வருவதால், இந்த சந்தேகம் இலங்கையில் தமிழ் மக்கள் மத்தியில் அதிகரிக்கின்றது. இலங்கையில் உருவாகி வரும் தேசிய நெருக்கடியை தங்களுக்கு சாதகமாக பயன்படுத்திகொண்டு தமிழ் மக்களை எவரும் கைவிட்டு விடுவார்களோ என்ற அச்சம் தமிழர்களுக்கு ஏற்படுவது சகஜமானதே.

இனப்பிரச்சினை தொடர்பான பேச்சுகளில் வெளிநாட்டு அனுசரணை இருப்பது இரகசியமாக வைக்க வேண்டியதில்லை. அந்த காலம் இன்று மலையேறி விட்டது. "அமெரிக்கா வருகிறது", "இந்தியா வருகிறது" என சிங்கள மக்கள் கோபிப்பார்கள் என்ற வாதம் இனிமேல் செல்லாது. இப்படி சொல்லிக்கொண்டே இருந்தால், தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு ஒருபோதும், எந்தவொரு அரசின் கீழும் வராது.

அதுபோல இனப்பிரச்னைக்கு தீர்வு வராவிட்டால் இந்த நாடு போதும் உருப்படவே உருப்படாது என்ற உண்மையை சிங்கள மக்களும் உணரும் காலம் வருகிறது. அதற்கான அரசியல், சமூக, பொருளாதார, கலாச்சார தேசிய நெருக்கடி சூழல் இப்போது நாட்டில் உருவாகி வருகிறது" என அவர் தெரிவித்துள்ளார்.

## முல்லைத்தீவில்...

யாழ். போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையிலேயே குறித்த தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

புதுக்குடியிருப்பு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 29 பேருக்கும், வெலிஓயா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 07 பேருக்கும், மல்லாவி ஆதார வைத்தியசாலையில் 02 பேருக்கும், மல்லாவி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஒருவருக்கும், முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலையில் ஒருவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (இ)

## தென்மராட்சியில்...

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவைச் சேர்ந்த 74 வயதுடைய எஸ்.சத்தியபாமா என்ற பெண் உயிரிழந்தார்.

அவரது பி.சி.ஆர் மாதிரி நேற்று யாழ். போதனா வைத்தியசாலையில் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

இதன் போது அவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

## மருத்துவர்...

வரத்து மருத்துவ நிறுவனத்தின் யாழ்ப்பாணம் கிளையில் மருத்துவச் சான்றிதழ் வழங்கும் மருத்துவர்களில் ஒருவரான நல்லூரைச் சேர்ந்த 72 வயதுடையவரே கொரோனாவால் உயிரிழந்துள்ளார்.

மேலும், மானிப்பாயைச் சேர்ந்த 53 வயதுடைய பெண் ஒருவரும், உரும்பிராயைச் சேர்ந்த 56 வயதுடைய ஆண் ஒருவரும் உயிரிழந்தனர்.

இதன்மூலம் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 227ஆக உயர்வடைந்துள்ளது. (இ - 03)

## 214 பேர்...

இதன்மூலம் நாட்டில் முதன்முறையாக ஒரே நாளில் கோவிட்-19 நோயினால் உயிரிழந்தோர் எண்ணிக்கை அதிகம் இதுவே முதன்முறையாகும்.

இரண்டாவது நாளாக 200 இற்கு மேற்பட்டோர் ஒரே நாளில் உயிரிழந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

2020 ஜனவரி தொடக்கம் நேற்று முன் தினம் வரை 8 ஆயிரத்து 371 பேர் கோவிட்-19 நோயினால் உயிரிழந்துள்ளனர்.

நாட்டில் ஒகஸ்ட் மாதத்தின் முதல் 23 நாள்களில் சுமார் 3 ஆயிரத்து 900 பேர் கோவிட்-19 நோயினால் உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை, நாட்டில் நேற்று மாலை நிலவரப்படி மேலும் 3 ஆயிரத்து 812 பேர் கோவிட்-19 தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

நாட்டில் 2020 ஜனவரி தொடக்கம் நேற்று வரை 4 லட்சத்து 16 ஆயிரத்து 182 பேர் கோவிட்-19 தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஈழநாடு
Eelanadu

# கொரோனா தொற்று தீவிரமடைந்ததால் பிரிட்டனின் சிவப்பு பட்டியலில் இலங்கை

## செப்ரெம்பரில் வெளியேறலாம் என்று தூதுவர் நம்பிக்கை

**கொழும்பு, ஓக. 28**

**பிரிட்டனின் புதுப்பிக்கப்பட்ட கொரோனாப் பயணக் கட்டுப்பாடுகள் வெளியிடப்பட்டுள்ள நிலையில், இலங்கை தொடர்ந்தும் சிவப்புப் பட்டியலில் உள்ளது.**

இலங்கையில் கொரோனா பரவல் தீவிரமடைந்த காரணத்தால் பிரிட்டனின் சிவப்புப் பட்டியலில் இலங்கை தொடர்கின்றது.

இதேவேளை, செப்ரெம்பர் மாதமளவில் பிரிட்டனின் சிவப்புப் பட்டியலில் இருந்து இலங்கை வெளியேறலாம் என்று பிரிட்டனுக்கான இலங்கைத் தூதுவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

பிரிட்டனின் புதுப்பிக்கப்பட்ட பயணக் கட்டுப்பாடுகளில் கனடா, டென்மார்க், பின்லாந்து, போர்துகல், சுவிட்சர்லாந்து, லிச்சென்ஸ்டீன் மற்றும் லிதுவேனியா ஆகிய நாடுகள் பச்சைப் பட்டியலுக்கு முன்னேறியுள்ளன.

தாய்லாந்து மற்றும் மொன்டினீக்ரோ ஆகிய நாடுகள் புதிதாக சிவப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன.

பிரிட்டனின் புதுப்பிக்கப்பட்ட பயணக் கட்டுப்பாடுகள் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் அமுலுக்கு வருகின்றது. (இ)

### பதுளை பொது வைத்தியசாலையில்

# வைத்தியர்கள் உள்ளடங்கலாக 120 பேருக்கு கொரோனா உறுதி

*பதுளை, ஓக. 28*

பதுளை பொது வைத்தியசாலையில் வைத்தியர்கள் உள்ளடங்கலாக நிர்வாகப் பிரிவில் 120 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என வைத்தியசாலையின் கொரோனா சிகிச்சை பிரிவுக்குப் பொறுப்பான வைத்தியர் பாலித ராஜபக்ஷ தெரிவித்தார்.

பதுளை பொது வைத்தியசாலையின் விசேட வைத்தியர்கள் மூவர் உள்ளிட்ட 11 வைத்தியர்கள், தாதியர்கள் 13 பேர், குடும்ப சுகாதார சேவை அதிகாரிகள் 08 பேர், ஏனைய அதிகாரிகள் 11 பேர், சிற்றூழியர்களில் சாரதி, பாதுகாவலர்கள் உள்ளிட்டவர்களுக்கே இவ்வாறு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அனைவரும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

அதேபோன்று வைத்தியசாலையில் ஐந்து கொரோனா சிகிச்சை விடுதிப் பிரிவுகளில் 150 தொற்றாளர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

தொற்றாளர்களில் 40 இற்கும் மேற்பட்டவர்களுக்கு ஒட்சிசனின் உதவியுடன் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது. (இ)

# கொரோனா நோய் மரணங்களுக்கு புகைப்பிடிப்பதும் பிரதான காரணம்

## வைத்தியர் தீபால் பெரேரா தெரிவிப்பு



*கொழும்பு, ஓக. 28*

புகைப்பிடிப்பதும் கொரோனா தொற்று நோய் மரணங்களுக்குப் பிரதான காரணியாக அமைந்துள்ளது எனக் கொழும்பு லேடி ரிஜ்வே வைத்தியசாலையின் குழந்தைநல வைத்தியர் தீபால் பெரேரா தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“இவ்வாறான கொரோனா மரணங்கள் பல கடந்த வாரம் பதிவாகியுள்ளன. புகைப்பிடிப்பதானது நுரையீரலைப் பாதிக்கின்றது. இவ்வாறானவர்கள் விரைவில் கொரோனாத் தொற்றால் ஏற்படும் நியூமோனியாவுக்கு உள்ளாகி விடுகின்றனர்.

புகைப்பிடிப்பவர்களுக்கு அருகில் இருப்பவர்களும் புகைப்பிடிபவர்கள் எதிர்கொள்ளும் அதே பாதிப்பை எதிர்கொள்கின்றனர்.

அதேபோன்று புகைப்பிடிப்பவர்களுடன் நெருக்கமாக இருக்கும் குழந்தைகளும் சிகரெட் புகையின் தீமையான விளைவுக்கு இலகுவில் உள்ளாகி விடுகின்றனர்” - என்றார். (இ)

# மரண அறிவித்தல்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 20 - 04 - 1940 | 26 - 08 - 2021 |

## முருகேசு தியாகராஜா (காந்தி)

மானிப்பாய் லோட்டன் வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு தியாகராஜா கடந்த (26.08.2021) வியாழக்கிழமை அன்று புளியடி ஞான வைரவர் திருவடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு – நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான ஐயம்பிள்ளை – கனகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், ஜெயலட்சுமியின் அன்புக் கணவரும், புஸ்பகலா (நெதர்லாந்து), ஜீவகரன்(சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை– ஊர்காவற்துறை), சத்தியகலா (வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை– மானிப்பாய்), வாசுகி (கனடா), திவாகி (நெதர்லாந்து) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பிரபாகரன், சுகிர்தா (யா/ சென் பெனடிக்ட் றோ.க. வித்தி), மணிவண்ணன் (யா/இணுவில் மத்திய கல்லூரி), கோணேஸ்வரன், ரவீந்திரன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், இராஜேஸ்வரி, காலஞ்சென்ற துரைராஜா, அண்ணாமலை, பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற குணதிலகம், திலகவதி, காலஞ்சென்ற தனலட்சுமி, யோகராணி, திருமகள், தெய்வேந்திரம், ஆனந்தராணி ஆகியோரின் அன்பு மைத்துனரும், லிஷானா, தனுஸ்கா, தாணிகா, கிருஸ்மிகா, ஆருசன், ஆதர்ஷன், அஸ்விதன், ஆர்த்தி, அபிஷ்சா, ஆதுர்சன், அஸ்வின், அரவிந் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று (28.08.2021) சனிக்கிழமை அன்று கோம்பயன் மணல் இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு :
**ஜீவகரன் - மகன்**
**Mobile : +94776109961**

தகவல்:
**குடும்பத்தினர்**



# வாவியில் மூழ்கி தொழிலாளி மாரணம்!

*மட்டக்களப்பு, ஓக. 28*

மட்டக்களப்பு, முறக்கொட்டாஞ்சேனை வாவியில் மூழ்கி தொழிலாளி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சித்தாண்டி பிரதேசத்தைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான பாக்கியராசா மகேந்திரன் (வயது 47) என்பவரே உயிரிழந்தவர் என்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

முறக்கொட்டாஞ்சேனை வாவிக்கு அப்பாலுள்ள நாவலப்பட்டி பிரதேசத்தில் கால்நடைப்பண்ணைத் தொழிலாளியான குறித்த நபர், கடையில் பொருட்கள் வாங்குவதற்கென வாவியைக் கடக்கும் வேளையில் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

மீனவர்கள் சடலம் ஒன்று மிதப்பதை அவதானித்து மீனவர்களது உதவியுடன் நேற்று மாலை சடலம் மீட்கப்பட்டுள்ளது.

திடீர் மரண விசாரணை அதிகாரி எம்.எஸ்.எம். நஸீர் சம்பவ இடத்துக்கு நேரடியாகச் சென்று விசாரணைகளை ஆரம்பித்தார். ஏறாவூர் பொலிஸார் இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (இ)

# மயங்கி விழுந்து ஒருவர் மரணம்!

வவுனியாவில் திடீரென மயங்கி விழுந்து ஒருவர் உயிரிழந்தார் என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

நேற்று மாலை இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, கற்குளம் படிவம் 3 பகுதியை சேர்ந்த 50 வயது ஆண் ஒருவர் திடீரென மயங்கி விழுந்தார். அவரை அயலவர்கள் அவசர நோயாளர் காவு வண்டி மூலம் குறித்த நபர் வவுனியா வைத்தியசாலையால் சேர்க்கப்பட்டார்.

ஆனால், அவர் வழியிலேயே உயிரிழந்து விட்டாரென பரிசோதித்த மருத்துவர்கள் தெரிவித்தனர். இறந்தவருக்கு பி. சி.ஆர். சோதனை நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஐ)







இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 27.08.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.05 மணி : உளவியல் கருத்து
7.15 மணி : கதைவழி அறமொழி-
யோன்சன் ராஜ்குமார் ஆசிரிய ஆலோசகர்
யாழ்ப்பாணம் வலயக்கல்வி



7.30 மணி : பத்திரிகைகள் ஒரு பார்வை
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : TIK TOK
11.00 மணி : அந்தக்காலம் இந்தக்காலம் -
மறு ஒளிபரப்பு

**பகல்**
12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)
1.00 மணி : மழலைகள் நேரம்-சிறுவர் நிகழ்ச்சி
1.30 மணி : WEEK END MOVIE- தாஜ்மஹால்
04.30 மணி : காட்டூன் தமிழ்
5.00 மணி : அந்தி மந்தாரை (நேரலை)
6.00 மணி : எது சரி? எது பிழை -
கொரோனாவிடமிருந்து பாதுகாக்க



**இரவு**
7.00 மணி : சுப்பர் குறுாப்-இசை நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
09.00 மணி: சொல்லாடுகளம்
10.00 மணி : நெற்றிக்கண்

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன்
கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு)
நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)
வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம்
(கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி :செய்திகள்
7.30 மணி : அருளுரை

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள்
(மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்கேளும் திருகோணமலை
(சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை
(திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம்
(மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு